உ
சிவமயம்



யாழ்ப்பாணம், தெல்லிப்பழை

# திருவாட்டி தையல்நாயகி சுந்தரமூர்த்தி

அவர்கள்

சிவபதப்பேறு எய்தியமை குறித்த

# தையல்நாயகி மலர்

15.02.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



80 ஆவது வயது பூர்த்தியில் தம்பதிகளாக....



திருமண வைர விழாவின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தண்டிகை கனகநாயக முதலி வழித்தோன்றலும்

திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி அவர்களின்

தர்மபத்தினியுமான

# திருவாட்டி தையல்நாயகி சுந்தரமூர்த்தி

அவர்கள்

சிவபதமெய்தியமை குறித்த

# தையல்நாயகி மலர்

**15.02.2007**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்





மாதாக்க சண்பக மாப்பாண முதலி – தண்டிகை கனகநாயக முதலி
மரபில் மயிலிட்டியில் பிறந்து, தெல்லிப்பழையில்
இல்வாழ்வில் புகுந்து, அதன் பயனாம் நன்மக்களைப் பெற்று
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளைக் கண்டு,
தான தருமங்கள் தலயாத்திரைகள் செய்து வையகத்தில்
ஓர் நிறைவான வாழ்க்கையை வாழ்ந்து இன்று வானுறையும்
தெய்வமாகி விட்ட எமது குடும்ப விளக்கு

**திருவாட்டி தையல்நாயகி சுந்தரமூர்த்தி**

அவர்களின் பொற் பாதங்களில்
அன்புக் காணிக்கையாக
இம்மலரைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண்ணில்
குழந்தையாக
**02.02.1913**

விண்ணில்
தெய்வமாக
**27.01.2007**

## அமரர்
# திருவாட்டி தையல்நாயகி சுந்தரமூர்த்தி

## *திதி வெண்பா*

திருவாரும் வியவாண்டு திகழ்தைத் திங்கள்
உருவாகும் வளர்ப்பிறை நவமியில் - தரு ஆர்
தையல்நாய கித்தாயார் சென்றடை ந்தார்
தையல் ஓர்பாகன் தாள்.

திதி - விய ஆண்டு தை மாதம் 12 ம் நாள்.
வளர்பிறை நவமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பன்னிரு திருமுறை

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

## முதலாம் திருமுறை

தலம்: திருநெடுங்களம் பண்: பழந்தக்கராகம்

நின்னடியே வழிபடுவான் நிமலாநினைக் கருத
என்னடியா னுயிரைவவ்வே லென்றடற்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடு நீர் சுமக்கும்
நின்னடியா ரீடர்களையாய் நெடுங்களமே யவனே.

பாடல் எண்: 3

## இரண்டாம் திருமுறை

தலம்: திருக்கேதீச்சரம் பண்: நட்டராகம்

நல்ல ராற்றவும் ஞானநன் குடையர்தம் மடைந்தவர்க் கருளிய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர் மலிகடன் மாதோட்டத்
தெல்லை யில்புக ழெந்தைகே தீச்சர மிராப்பகல் நினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழு மன்பரா மடியாரே.

பாடல் எண்: 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் திருமுறை

தலம்: திருக்கோணேஸ்வரம் பண்: புறநீர்மை

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

பாடல் எண்: 5

## *திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்*

## நான்காம் திருமுறை

தலம்: திருச்சேறை பண்: திருநேரிசை

விரிந்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமரு கங்கை
தரித்ததோர் கோல கால பயிரவ னாகி வேழம்
உரித்துமை யஞ்சக் கண்டு ஒண்திரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே.

பாடல் எண்: 6

## ஐந்தாம் திருமுறை

தலம்: கோயில் பண்: திருக்குறுந்தொகை

அல்ல லென்செயும் அருவினை யென்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்
தில்ல மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோ ரடிமை பூண் டேனுக்கே.

பாடல் எண்: 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாம் திருமுறை

தலம்: திருச்செங்காட்டங்குடி பண்: திருத்தாண்டகம்

கன்னியையங் கொருசடையிற் கரந்தான் தன்னைக்
கடவூரில் வீரட்டங் கருதி னானைப்
பொன்னிசூழ் ஐயாற்றெம் புனிதன் தன்னைப்
பூந்துருத்தி நெய்த்தானம் பொருந்தி னானைப்
பன்னியநான் மறை விரிக்கும் பண்பன் தன்னைப்
பரிந்திமையோர் தொழுதேத்திப் பரனே யென்று
சென்னிமிசைக் கொண்டணிசே வடியி னானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே. பாடல் எண்: 6

## சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

## ஏழாம் திருமுறை

தலம்: நொடித்தான்மலை. பண்: பஞ்சமம்

இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்த யானை அருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவராரென எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்தான்மலை யுத்தமனே. பாடல் எண்: 9

## எட்டாம் திருமுறை

## அருட்பத்து - திருப்பெருந்துறையில் அருளியது

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. பாடல் எண்: 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### சேந்தனார் திருவிசைப்பா

தலம்: திருவிடைக்கழி பண்: பஞ்சமம்

தானமர்பொருது வானவர்சேனை மடியச்சூர் மார்பினைத் தடிந்தோன்
மானமர்தடக்கை வள்ளல்தன் பிள்ளை மறைநிறை சட்டாரம்
தேனமர் பொழில்சூழ் திருவிடைக்கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற
கோனமர் கூத்தன் குல இளம்களிறு என்கொடிக்கு இடர் -
பயப்பதும் குணமே.

பாடல் எண்: 3

## சேந்தனார் – திருப்பல்லாண்டு

தலம்: கோயில் பண்: பஞ்சமம்

ஆரார்வந்தா ரமரர் குழாத்திலணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியுமாடியும் பல்லாண்டு கூறுதுமே.

பாடல் எண்:12

## பத்தாம் திருமுறை

### திருமூலநாயனாரின் திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினோராம் திருமுறை

## திருமுருகாற்றுப் படை வெண்பா

அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும் நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்று
முருகாஎன்(று) ஓதுவார் முன்.

பாடல் எண்: 6

## பன்னிரண்டாம் திருமுறை

### *சேக்கிழாரின் – பெரியபுராணம்*

வானவர் உய்ய வேண்டி மறிகடல் நஞ்சையுண்டு
தானவர் புரங்கள் வேவ மூவரைத் தவிர்த்து ஆட்கொண்டீர்
நான்மறைச் சிறுவர்க் காக காலனைக் காய்ந்து நட்டீர்
யான்மிகை உமக்கு இன்று ஆனால் என்செய்வீர் போதாது – என்றார்

பாடல் எண்: 354

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

*மகா புண்ணியத்தால் சம்பாதிக்கப்பட்ட மனித சன்மம் செய்ய வேண்டியதை வேதம் கூறும்.* **'மாத்ரு தேவோ பவ'** *மாதா என்ற தெய்வத்தை உபாசிக்கின்றவனாக இரு என்று கூறியதற்கு இணங்க ஸ்ரீபகவத் பாதாள் தனது தாய் முத்தியடையும் நிலையில் இருப்பதைக்கண்டு மனம் நெகிழ்ந்து பிரம்ம ஞானியான ஆதிசங்கரர் அருளிய*

## மாத்ரு பஞ்சகம்

ஆஸ்தாம் தாவதியம்ப்ரசூதி சமயே துர்வார சூலவ்யதா !
நைருச்யம் தனுசோஷணம் மலமயீ சய்யாச ஸாம்வத்ஸரீ !
ஏகஸ்யாபி ந கர்ப்ப பாரபரண கிலேசஸ்ய யஸ்யாக்ஷ ம: !
தாதும் நிஷ்க்ருதி முன்னதோபி தனய: தஸ்யை ஜனன்யை நம:!!

பாடல் எண்: 1

**இதன் பொருள்:-** *தனது கீர்த்தி, தான் செய்த காரியம் ஏதுவானாலும் இருக்கட்டும், எனது தயார் என்னைக் கருப்பையில் வைத்து ஒவ்வொரு நிமிடமும் என்னைத் தாங்கும் பொழுது அரும்பாடுபட்ட கஷ்டத்திற்கு நான் அதற்குப் பிரதி உபகாரம் ஏதாவது செய்திருக்கிறேனா?*

*அதுவுமிருக்கட்டும், என்னைப் பெற்றதும் என்னை ரக்ஷிக்க ருசியில்லாத பொருளைச் சாப்பிட்டுச் சீவித்த எனது தாய்க்கு ஏதாவது செய்திருக்கிறேனா?*

*தனது சரீரத்தை இளைக்கச் செய்வதும், தூக்கமில்லாமலும், எனது மலத்திலேயே படுத்து ஒரு வருடம் என்னைக் காத்த தாயாருக்கு ஏதாவது செய்திருக்கிறேனே?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னையே கஷடப்படுத்திக் கொண்டு பொறுமையுடன் காப்பாற்றிய குழந்தைகளில் எவனாவது தாயாருக்குப் பிரதியுபகாரம் செய்தது உண்டா? யாராலும் தாயாருக்குப் பிரதியுபகாரம் செய்யமுடியாது. எனவே அம்மா உனக்கு நமஸ்காரம் செய்கின்றேன். ஏற்றுக்கொள்.

குருகுல முபஸ்ருத்ய ஸ்வப்ன காலேது தருஷ்ட்வா
யதி ஸமுசித வேஷம் ப்ராவ்ருதோமாம் த்வமுச்சை:!
குருகுல மத ஸர்வம் ப்ராரு தத்தே ஸமக்ஷம்
ஸபதி சரண யோஸ்தே மாதரஸ்து ப்ரணாம:!! பாடல் எண்: 2

**இதன் பொருள்:-** நான் வித்தியாப்பியாசம் செய்யச் சென்றபோது அம்மா நீங்கள் தன்னை மறந்து தூங்கி வீட்டீர்கள். தூக்கத்தில் நான் சன்யாசியானது போல் ஒரு கனவைக் கண்டு, அழுதவண்ணமாய் குருகுலம் வந்து கதறியது குருகுலவாசிகளும் கதறும்படி செய்த அம்மா, உனக்கு நமஸ்காரம்.

ந கஸ்தம் மாகஸ்தே மரண மையே தோயமபி வா
ஸ்வதாவா நோ தத்தா மரண திவஸே ச்ராத்த விதினா!
ந ஜப்தோ மாதஸ்தே மரணஸமயே தாரக மனு:
அகாலே ஸம்ப்ராப்தே மயிகுரு தயாம் மாதரதுலாம் பாடல் எண்: 3

**இதன் பொருள்:-** அம்மா' நீ முத்தியடையும் சமயத்தில் உனக்குக் கொஞ்சம் சலமாவது வாயில் விட்டேனா? பிறகும் ஸ்வதா மந்திரத்தினால் சிரார்த்தம் தர்ப்பணமாவது செய்தேனா? உனது முத்தி சமயத்தில் தாரக மந்திரமாவது உன் காதில் ஓதினேனா? அச்சமயம் எனக்குக் கிடைக்காததாலும், எதுவும் செய்ய அதிகாரமில்லாததாலும் சன்யாசியானதாலும் எந்த வைதீகமும் அனுஷ்டிக்க முடியாது போனதால் மனம் தவிக்கின்ற உனது மகனான என்னிடம் தயவுசெய்ய வேண்டும் அம்மா. உனது சரண கமலத்தைப் பிடித்து வேண்டுகிறேன்.

முக்தா மணிஸ்த்வம் நயனம் மமேதி
ராஜேதி ஜீவேதி சிரம் சுதத்வாம்!
இக்யக்தவத் யாஸ்தல வாசி மாதர்
ததாம்யகம் தண்டுல மேவசுஷ்கம்!! பாடல் எண்: 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதன் பொருள்:-** *அம்மா என்னைக் காணும் போதெல்லாம் என் முத்தே, என்கண்ணே, என் அப்பனே ராசா' நீ சிரஞ்சீவியாக இருக்க வேண்டும் என்று எப்பொழுதும் சொல்லி என்னிடத்தில் கருணையையும் அன்பையும், தயையும் கலந்த அம்ருதமயமான சொல்லும் தாரையினால் என்னைச் சீராட்டி, பாலூட்டி, தாலாட்டி என்னை வளர்த்த எனது அன்னைக்கா வாயிலே வேகாத அரிசியைச் சமர்ப்பிப்பேன். இதைப் பொறுக்க முடியவில்லையே' அம்மா உன்னைச் சரணடைகிறேன்.*

அம்பேதி தாதேதி சிவேதி தஸ்மின்
ப்ரஷூதி காலே யதவோச உச்சை!
க்ருஷ்ணேதி கோவிந்த ஹரே முகுந்தேத்
யஹோ ஜனன்யை ரசிதோய மஞ்ஜலி:!! பாடல் எண்: 5

**இதன் பொருள்:-** *அம்மா என்னைப் பெற்றெடுக்கும் போது பொறுக்க முடியாத வேதனைச் சமயத்தில்* **'அம்மா! அப்பா! சிவபெருமானே என்றும்: கிருஷணா, கோவிந்தா, ஹரமுகுந்தா'** *என்று அழைத்த அந்த வாக்கோடு கூடிய என் கருணைத் தெய்வமே' என் இரு கைகளையும் தூக்கி உனக்கு அஞ்சலி செய்து உன்னைச் சரணடைகின்றேன் என்று பெற்ற தாய்க்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.*

## சர்வ தேவிகள் துதி

ஓம் ஸ்ரீ அகண்ட அத்வைத அனுரேணு பரிபூரணி
ஸ்வப்ரகாச ஜோதி ஸ்வரூபிணி ஆனந்த ரூபிணி
அகில ஜகத் சிருஷ்டி காரணி கைலாச பக்த ஹரணி
சங்கணாலங்க்ருத பாணி காமரூபிணி நித்திய கல்யாணி
அற்புத ஷ்ரேணி நாராயணீ தீனரக்ஷி மதுர பாக்ஷிணி
காமாக்ஷி மீனாக்ஷிகாசி விசாலாக்ஷி கஞ்ச தளாயதாக்ஷி
கருணா கடாக்ஷி நிலாக்ஷி பாலாக்ஷி சர்வசாக்ஷி
அபயாம்பா அம்புஜாம்பா குடிலகுந்தலாம்பா குசாம்பா
குணாம்பா சகுண நிர்குணாம்பா அம்பிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனேஸ்வரி ப்ராணேஸ்வரி காமேஸ்வரி சர்வேஸ்வரி மகேஸ்வரி
அகிலாண்டேஸ்வரி சிம்மா சனேஸ்வரி
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி நவயௌவன ஷாலினி மாலினி
லோலினி தீனானுகூலினி மோகினி மனோன்மணி
காத்யாயனி ஜனனி பவானி ஏகாக்ஷரி திரியாக்ஷரி பஞ்சாக்ஷரி
நவாக்ஷரி பஞ்சத ஷாக்ஷரி சோடஷாக்ஷரி மயூரி மௌரி மங்கள கௌரி
உமா சந்த்ர மௌலி ஆதி பராசக்தி ஆவரணசக்தி ஆதார வேதசக்தி
இச்சாசக்தி, க்ரியாசக்தி ஞானசக்தி சத்சக்தி சித்சக்தி சர்வமகாசக்தி
ஸ்ரீ துர்க்கா லக்ஷ்மி சரஸ்வதி சாவித்திரி காயத்திரி
பரப்பிரம்ம மகிக்ஷி ஸ்ரீவித்யா லலிதாம்பிகா தேவதா.

## நடராஜப் பத்து

கடல் என்ற புவிமீதில் அலை என்ற உருக்கொண்டு
கனவு என்ற வாழ்வை நம்பிக்
காற்றென்ற மூவாசை ஆற்றொணாச் சுழலிலே
கட்டுண்டு நித்தம் நித்தம்
உடல் என்ற கும்பிக்கு உணவு என்ற இரை தேடி
ஓயாமல் இரவு பகலும்
உண்டுண்டு உறங்குவதைக் கண்டதே யல்லாமல்
ஒருபயன் அடைந்திலேனைத்
தடமென்ற இடிகரையில் பந்த பாசங்கள் எனும்
தாபரம் பின்னலிட்டுத்
தாயென்றும் சேயென்றும் நீ என்றும் நான் என்றும்
தமியேனை இவ்வண்ண மாய்
இடை நின்று தடை செய்ய ஏனென்று கேளாது
இருப்பதுவு மழகாகுமோ?
ஈசனே சிவகாமிநேசனே எனையீன்ற
தில்லை வாழ் நடராஜனே. பாடல் எண்: 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகுலேஸ்வரர் திருப்பதிகம்

சீர்பெறும் தென்பொதிய மலையிருந் தருள் செய்யும்
தெய்வமுனி தந்த தமிழும்
தேவாதி தேவனொரு வன்னவன் சிவனெனச்
செப்பிடும் சைவநெறியும்
ஊர்தொறும் பண்டையி லொன்றாகி வளர்தலின்
ஓங்கு யாழ்ப் பாணதேயத்
துத்தரத் தோமென்ன ஒலி செயுங் கடல்மருங்
குற்ற நகு லாசலத்தில்
ஆர்வமோடு ஆடுபவர் அகவுடற் பிணியெலாம்
அகல்விக்கு மருவியின் பால்
அடிதொழும் அன்பருக் கவரவர் நிலையறிந்
தருளவுமை அம்மையோடும்
சேர்பு கோயில்கொண்ட தெய்வமே எமதுவினை
தீரநீ யருள வேண்டும்
திங்களணி செஞ்சடில மங்கையுமை பங்கிலுறை
தேவநகு லேசுவரனே.

**இலக்கண வித்தகர்**
**பண்டிதர். இ. நமச்சிவாதேசிகர்.**

# ஸ்ரீ உண்ணாமுலையம்மைப் பதிகம்

சீர்கொண்ட வகிலந் தனில்வாழ மாந்தர் செய்கோடி தப்பிதத்தை
ஏர்கொண்ட உன்தன் வாளாலறுத்து மிரட்சிக்கு முலகம்பைநீ
ஆர்கண்டு நின்சீடருரை செப்பவல்ல அனாதரட்சகி நீயலவோ
வார்கொண்ட உண்ணாமுலை நாமதேவி வரவேணு மென்தனருதே

~ திருவருட்பிரகாச வள்ளலார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ அன்னபூர்ணாஷ்டகம்

நித்யாநந்தகரீ வராபயகரீ சௌந்தர்ய ரத்னாகரீ
நீர்த்தூதாகில கோர பாவனகரீ ப்ரத்யஷமா ஹேச்வரீ!
ப்ராலேயாசல வம்ச பாவனகரீ காசிபுரா தீச்வரீ
பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ மாதான்ன பூர்ணேச்வரீ!! ~ ஸ்ரீ சங்கர்

பாடல் எண்: 1

## ஸ்ரீ இராஜ ராஜேச்வரி அஷ்டகம்

அம்பா சாம்பவிசந்த்ர மௌளிரபலா அபர்ணா உமா பார்வதீ
காளீ ஹைமவதீ சிவா த்ரிநயனீ காத்யாயனீ பைரவீ
ஸாவித்ரீ நவயௌவனா சுபகரீ சாம்ராஜ்ய லக்ஷ்மீப்ரதா
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீ இராஜ ராஜேச்வரீ. பாடல் எண்: 1

## ஸ்ரீ அபிராமி அம்பாள் துதி

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாக இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பும் அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள்வா ராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாய் நீ அபிராமியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ காமாட்சி அம்மன் விருத்தம்.

பெற்றதா யென்றுன்னை மெத்தவும் நம்பினான்
பிரியமா யிருந்த னம்மா
பித்தலாட்டக் காரியென்று நானறியாது உன்
புருஷனை மறந்த னம்மா
பத்தனாயிருந்து முன் சித்தமு மிரங்காமல்
பாராமுகம் பார்த்திருந்தால்
பாலன் யானெப்படி விசனமில் லாமலே
பாங்குட னிருப்பதம்மா
இத்தனை மோசங்க ளாகாது ஆகாது
இது தர்மமல்ல வம்மா
எத்தனை ரக்ஷிக்க சிந்தனை களில்லையோ
யிதுநீதி யல்ல வம்மா
ஆத்தி முகனாசையா லிப்புத்திரனை மறந்தையோ
அதை யெனக்கருள் புரிகுவாய்
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. பாடல் எண்: 5

## ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் பிள்ளைத்தமிழ்

பெருந்தே னிறைக்கு நறைக் கூந்தற்
பிடியே வருக முழு ஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைந்த பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள் பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலயத் துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே.

- ஸ்ரீ குமரகுருபரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மலைவளர் காதலி

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி திரியம்பகி யெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்தரள
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சக்தியென்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியார் நாமமே
நானுச்ச ரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவு ளாரணி யெனப் புகழ
வகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே
வாரணியு மிருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவையரசே
வரைராச னுக்கருகண் மணியா யுதித்த மலை
வளர்காத லிப்பெ ணுமையே. பாடல் எண்: 5

- தாயுமானவர் சுவாமிகள்

# ஸ்ரீ துர்க்கா தேவிப் பதிகம்

பந்தபா சத்தினாற் பந்தித்து மதிகெட்ட
பாவியான் செய்த பிழைகள்
பலகோடி யெனினுமவை யாவும் பொறுப்பதுன்
பாரமெனை யீன்ற தாயே
எந்தவுடல் பொருளாவி மூன்றுமுன் றனதாக
வீந்தே னெனக்கிங்கினி
ஏதொன்று மில்லையெல் லாமுன்ன தேதகா
தென்னைக்கை விடல் சென்னிதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திக்க விழிகள் தரிசிக்கக் கரங்குவிய
வரவலந் தாள்கள் வாழ்த்த
வாய் செவிகள் கேட்பவரி தாயபுக ழோடுதிரு
வடியையனு தினமுமனமே
சிந்திக்க வும்வரந் தந்தருள வேணுமென்
சென்மசா பலியமாகத்
தெல்லிநக ருழகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. பாடல் எண்: 10

– தம்பர் பொன்னையா
*சங்கானை.*

## ஸ்ரீ இலக்ஷ்மி அட்டகம்

ஸர்வஜ்ஞே ஸர்வ வரதே ஸர்வ துஷ்ட பயங்கரி!!
ஸர்வதுக்க ஹரே தேவி மகா லக்ஷ்மி நமோ (அ) ஸ்துதே!!

பாடல் எண்: 3

ஸித்தி புத்தி ப்ரதே தேவி புக்தி முக்தி ப்ரதாயினி!
மந்த்ரமூர்த்தே ஸதாதேவி மகாலக்ஷ்மி நமோ(அ) ஸ்துதே!!

பாடல் எண்: 4

**தேவேந்திரன்**

## ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினி

சுரவர வர்ஷிணி துர்த்தர தர்ஷிணி
துர்முக மர்ஷிணி ஹர்ஷரதே
திரிபுவன போஷிணி சங்கர தோஷிணி
கில்பிஷ மோஷிணி கோஷரதே!
தனுஜ நிரோஷினி திதிசுதரோஷிணி
துர்மதசோஷிணி சிந்து சுதே
ஜய ஜய ஹே மகிஷா சுரமர்த்தினி
ரம்யக பர்த்தினி சைலசுதே பாடல் எண்: 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத் திருப்புகழ்
## கதிர்காமம்

அடைபடாத நாடோறு மிடைவிடாது போய்வாயு
வடையமனின் வீடாகு மெனநாடும்
அருள்பெறாவ நாசார கருமயோகி யாகாம
வலனிமீதி லோயாது தடுமாறி
உடலம்வேறு யான்வேறு கரணம்வேறு வேறாகி
யுதறிவாச காதீத வடியூடே
உருகியாறி யாசார பரமயோகி யாமாறு
னுபயபாத ராசீக மருள்வாயே
வடபராரை மாமேரு கிரியெடா நடாமோது
மகரவாரி யோரேழு மழுதாக
மகுடவா வராநோவ மதியுநோவ வாரீச
வனிதைமேவு தோளாயி ரமுநோவக்
கடையமாதி கோபாலன் மருகதீர வேல்வீர
கதிர்காம மூதாரி லிளையோனே
கனகலோக பூபால சகலலோக வாதார
கருணைமேரு வேதேவர் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை ஆதீன கர்த்தாவின் ஆத்ம சாந்தியுரை

இல்லற தர்ம வாழ்வில் பிரமசாரி, வானப்பிரஸ்தன், சன்னியாசி என்போரை ஆதரித்து அவர்களை அவர்தம் கடமைகளில் செயற்பட ஏவுதல் இல்லத்தரசிகளின் மிக முக்கிய கடமையென ரிஷ்ய சிருங்க ரிஷிக்கு வசிஷ்டர் உபதேசித்திருந்தார். அதோடு ஓர் தேவ சாதியா ரான பிதிரர், தெய்வம், அதிதி, சுற்றம் தான் என்ற ஐந்திடத்து கூறப் படுகின்ற தர்ம வழியை குறைவிலாது முன்னெடுப்பதும் இல்லத்தரசி களின் கடமையுமே எனவும் வசிஷ்டர் உலகிற்கும் அறிவுரை செய்கின்றார்.

இவற்றை நடாப்பிப்பதற்கு கூட தவமும் வேண்டும். அருளும் வேண்டும், நல்குடிப் பிறப்பும் வேண்டும்.

ஆலய மணியோசை கேட்கும் சூழலுள் வாழ்ந்தால்தான் செயற் கரிய நற்சேவைகளை செய்ய மனசும் புனிதங்கொண்டு ஆற்றுப் படுத்தி நிற்கும்.

தெல்லிப்பழை சுந்தரமூர்த்தி குடும்பத்தினரை மக்கள் நன்கறிவர். மேற்கூறிய பண்புகளோடு சிவ தீட்சைகளைப் பெற்று சிவனடி யார்களைப் போன்று சிவப்பொலிவுடன் உலாவுவார்கள். சிவ தர்மங் களையே முன்னெடுத்து வளர்த்துவிடும் பாக்கியசாலிகள். திருமதி தையல்நாயகி சுந்தரமூர்த்தி ஓர் தைமாத மூல நட்சத்திரத்தில் உதயங் கொண்டு தொன்னூற்றியைந்து வருடகாலம் இப்பூவுலகில் ஆற்ற வேண்டிய கடமைகளை நிறைவுபடுத்திவிட்டு ஓர் தை மாத கார்த்திகை நட்சத்திர தினத்தில் சிவனடி சேர்ந்துவிட்டார்.

தெல்லிப்பழை யாமாவளவு அரியதோர் பொக்கிஷத்தை இழந்து நிற்கிறது கிரமமே சோகமயமாகியது. உலகமே மாயையில் உழன்று நிற்கிறது. வாழ்வும் அத்தகையதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் மாயா உலகில் ஆற்றவேண்டிய நற்தர்மங்களையாற்றி விட்டு சிவகதி அடைவதுதான் மானிடர்களது பிறப்பின் தாற்பரியம் என்பதை ரிஷிபத்தினியான வாசுகி உலகிற்கு உணர்த்தியவர். இந்தரீதியில் தையல்நாயகியும் ஆற்ற வேண்டியவற்றை பூர்த்தி செய்து விட்டு சிவகதியில் இணைந்ததும் ஆச்சர்யமேயில்லை.

மாவைக்கந்தனதும் இணைபிரியா பக்தை. காணும் போதெல்லாம் கையுறை தந்து அகமகிழ்வார்.

அத்தகைய புண்ணியவதியின் ஆத்மா சாந்திபெற வேண்டுமென யானும் மாவைக்கந்தனிடம் விண்ணப்பித்து பிரார்த்திக்கின்றேன்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்,
தெல்லிப்பழை.

மஹாராஜஸ்ரீ சு – து. ஷண்முகநாதக்குருக்கள்
மாவையாதீனகர்த்தா - பிரதமகுரு

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

- திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை உரை

தெல்லிப்பழை கிழக்கில் மகத்துவமான ஒரு குடும்பம் திரு. சுந்தரமூர்த்தி ஆசிரியரின் குடும்பமாகும். நூற்றாண்டு விழாக்காணும் நிலையில் ஆசிரியர் அவர்கள் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருடைய பாரியார் சமீபத்தில் அமரத்துவம் அடைந்ததை அனைவரும் அறிவர். தையல்நாயகி என்ற நாமத்தைக் கொண்ட இந்த அம்மையார் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள் ஆகியோரை நிறைவாகக் கண்டவர். அல்லும் பகலும் காசிப்பிள்ளையாரை வழிபாடு செய்து தமது கருமங்களை நடத்தியவர் இவர்.

**'மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை'**

என்ற குறட்பாவுக்கு ஏற்ப சிறந்த வாழ்க்கைத் துணையாகவும் உயர்ந்த அன்னையாகவும், பரிவான பாட்டியாகவும் வாழ்ந்தவர் இவர். இல்லற வாழ்வு வாழ்ந்து முத்துவிழாக்கண்ட பெருமைக்குரியவர் இவ்வம்மையார். எனவே அன்னாரின் மறைவையொட்டி எங்கள் ஆழ்ந்த அநுதாபத்தை செலுத்தவேண்டிய கடமைக்கு உட்பட்டிருக்கிறோம். அமரத்துவ வாழ்வில் அன்னார் அமைதியடைய வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை,**
**ஸ்ரீலங்கா.**

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
**சமாதான நீதிபதி**
**தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுருவின் பிரார்த்தனையுரை

தெல்லிப்பழையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தையல் நாயகி சுந்தரமூர்த்தி அம்மையாரின் மறைவுச் செய்திகேட்டு நாமும் எமது தேவஸ்தானமும் ஆறாத்துயர் அடைந்தோம்.

அன்னை அவர்கள் நிறைந்த தெய்வபக்தியும், சமயப்பற்றும், சமூகப்பற்றும் நிறைந்த உத்தம சீலராகவும், விநாயகர், முருகன், அப்பிகையின் திருவளைப் பெற்ற புண்ணியசீலர் ஆவார்.

அம்மையார் அவர்கள் சிறந்த இல்லத்தரசியாக வாழ்ந்து இல்லறத்தை நல்லறமாக்கிய உத்தமியாக வாழ்ந்து காட்டியவர் ஆவார்.

எல்லோரிடமும் அன்பாகப் பழகும் இயல்புடைய அவர் எம்மை யும் தமது குடும்ப அங்கத்தவராக அரவணைத்து இன்று எமது உயர்ச்சியில் பெருமிதம் அடைந்து நாம் நலமாக வாழ்வதற்கு தனது உளப்பூர்வமான நல்வாழ்த்துக்கள் வழங்கி, வாழ்ந்த அம்மையாரின் இழப்பால் துயருறும் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப் பிள்ளைகளுக்கு ஆறுதல் கூறி அன்னையின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருளை வேண்டி பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
தெல்லிப்பழை.

சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக்குருக்கள்
பிரதான சிவாச்சாரியார்.

**இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றி னின்ற துணை.**

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங்**
**கைம்புலத்தா றோம்ப றலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருவாட்டி தையல்நாயகி அம்மையாரின் வாழ்க்கைக் குறிப்புக்கள்

இந்துமா சமுத்திரத்தின் முத்து எனத்திகழும் ஈழவளநாட்டின் சிரம்போல் விளங்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிவடக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள மயிலிட்டிக் கிராமத்தில் தண்டிகை கனகநாயகமுதலி வழித்தோன்றல் அமரர் பொன்னையா அவர்களுக் கும் மாதாக்க சண்பக யாழ்ப்பாணமுதலி வன்னியசேகரமுதலி வழித்தோன்றல் அமரர் வள்ளியம்மைப்பிள்ளை அவர்களுக்கும் இரண்டாவது மகளாக 1913ஆம் ஆண்டு தை மாதம் மூலநட்சத்திரத்தில் (1913.02.02) பிறந்தார்.

இவரின் மூத்தசகோதரி நீலாம்பிகை (பொன்னம்மா) ஆவார். இவர்களின் தாய்வழிப்பேரன் அமரர் சரவணமுத்து வேலுப்பிள்ளை அவர்கள் வியாபாரத்தில் சிறப்புற்று விளங்கியவர். அவரின் தம்பிப்பிள்ளை, சின்னப்பா ஆகிய இரு ஆண்பிள்ளைகளும் அரசாங்க உத்தியோகம் பார்த்தனர். இதனால் பொருளாதார வளம்மிக்கசூழலில் வளர்ந்தார்.

சகோதரிகள் இருவரும் பேய்க்கோயில் பள்ளிக்கூடம் என அக்காலத்தில் வழங்கப்பட்ட கலைமகள் வித்தியாலயத்திலும், பின்னர் காங்கேசந்துறை அமெரிக்கமிசன் பாடசாலையிலும் ஆரம்பக் கல்வியைப் பெற்றார்கள்.

அக்காலத்தில் இருந்த வேலுப்பிள்ளைச் சட்டம்பியார் சிதம்பரப் பிள்ளை உபாத்தியாயர் போன்ற ஆசிரியர்களையும், கற்ற கல்வியை யும் கடைசிக்காலம்வரை நினைவில் வைத்திருந்தார். இடைநிலைக் கல்வியை அமெரிக்கமிசன் பாடசாலையான உடுவில் மகளிர் கல்லூரியில் அதிபர் புக்வால்டர் அம்மையார் அதிபராக இருந்த காலத்தில், விடுதியில் தங்கியிருந்து கல்விகற்றார். இதனால் தமிழறிவு டன் ஆங்கிலமொழியிலும் எழுத வாசிக்க பேசக்கூடிய திறமை பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தையல்நாயகி அம்மையாரின் தந்தை, தாய்வழிப்பேரன் ஆகியோர் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். இவர்களுக்குத் தெல்லிப்பழையிலும் பூர்வீகக்காணி நிலம் இருந்தது. 1930 ஆம் ஆண்டளவில் தெல்லிப்பழை யாமாவளவில் கல்வீடு கட்டி குடியேறினார்கள்.

இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் இவரின் சிறியதாயார் தெய்வானைப்பிள்ளை சங்கரப்பிள்ளை குடும்பத்தினர் இவ்வீட்டில் வந்து சில ஆண்டுகள் வசித்தனர். இவர்களுக்கு மூன்று ஆண் மக்கள். இதனால் இரு சகோதரிகள் மூன்று சகோதரர்கள் ஆனார்கள். இவர்களுடன் சொந்தச் சகோதரர்கள் போல இறுதிவரை பாசத்துடன் பழகிவந்தனர். அக்காலத்தில் கல்விகற்ற பெண்கள் குறைவான படியால் இவரை ஆசிரியத் தொழிலுக்கு அழைத்தனர். பெற்றோர், சுற்றத்தார் அதற்கு அநுமதியாது இவரைத் திருமணவாழ்வில் ஈடுபடுத்தினர்.

இருபாலை மண்ணாடுமுதலி வழிவந்த சிவபூசைக்காரர் ஆறுமுகம் திருச்சிற்றம்பலம் அவர்களின் மூத்தமகன் அமரர் ஆறுமுக சுவாமியை நீலாம்பிகைக்குத் திருமணம் முடித்து வைத்தனர். இரண்டாவது மகனான திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி ஆசிரியரை 1934 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் வெள்ளிக்கிழமை (1934.12.03) அமரர் தையல்நாயகி அம்மையார் கரம்பற்றினார்.

அக்காலத்தில் சைவப்பிரகாச வித்தியசாலையில் ஆசிரியராக மணமகன் கடமையாற்றியதால் திருமணத்தின்போது ஆசிரியர்களும் மாணவர்களும் ஊர்வலமாக அழைத்துச் சென்று விழாக்கொண்டாடி வாழ்த்தினர்.

பெரியோரது ஆசியுடனும், ஊராரின் வாழ்த்துக்களுடனும் ஆரம்ப மான அவரின் இல்வாழ்க்கை எழுபத்திரண்டு ஆண்டுகளைக் கடந்து எழுபத்து மூன்றாவது ஆண்டும் தொடர்ந்தது. சிவபூசைக்கார ஆறுமுகம் பரம்பரையினர் அமரர் திருச்சிற்றம்பலம் அவர்கள் குடும் பம் சைவத்தில் உறைப்பாக நின்றபடியால் திருமணத்தின் முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகள் இருவரும் யாமா வீட்டில் சிவதீட்சை பெற்றுக் கொண்டனர். சைவ அனுட்டானம் பார்ப்பதை அமரர் தையல்நாயகி அவர்கள் நீண்ட காலம் செய்து வந்தார்.

இவர்களின் இல்வாழ்க்கைப் பயனாக வெற்றிவேலாயும், அம்பிகா தேவி, சயதேவி, கலாதேவி, பாலச்சந்திரன், சகுந்தலாதேவி, லோகபாலினி ஆகிய புத்திரர்களைப் பெற்றனர். பாலச்சந்திரன் ஆறுவயதில் 1951ஆம் ஆண்டு காலமாகிவிட்டார். பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் பெயர்சூட்டல், பால்பருக்கல், காதுகுத்தல், ஏடு தொடக்குதல், பெண்பிள்ளைகள் பருவமடையும் போது தோய வார்த்தல் (ருதுசாந்தி) போன்றவற்றை சைவமுறைப்படி செய்து வளர்த்தனர்.

பிள்ளைகள் ஆரம்பக்கல்வியை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், இடைநிலை - உயர்கல்வியை மகாஜனாக் கல்லூரியிலும் கற்றனர். மூத்தமகன் வெற்றிவேலாயும் மகாஜனாக் கல்லூரியில் (H.S.C) உயர்கல்வியில் சித்தியடைந்து பரீட்சைத் திணைக்களத்தில் எழுதுவினைஞராகத் தொழிலில்சேர்ந்து கொண்டார்.

நீண்டகாலம் பரீட்சைத் திணைக்களத்தில் பணியாற்றி பின் யாழ்ப்பாணம் கல்வி அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்று பின் நிதி உதவியாளராகப் பதவி உயர்வு பெற்றுக் கடமையாற்றி ஓய்வுபெற்றார்.

இவருக்குத் தொல்புரம் அமரர் அப்பாத்துரை ஈஸ்வரி தம்பதியரின் மூத்தமகள் செல்வமலரைத் திருமணம் செய்து வைத்தனர். இவர்களின் இல்வாழ்க்கைப் பயனாக செல்வகௌரி, செல்வபவன் என்னும் இரு மக்கட் செல்வங்களைப் பெற்றனர். செல்வகௌரி தெல்லிப்பழை அமரர் தணிகாசலம் புவனேஸ்வரி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரன் விஜயகுமாரைத் திருமணம் செய்து சுவிற்சலாந்தில் வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்களுக்கு வீணா, விதுலா என்ற இரு மக்கள் உள்ளனர். செல்வபவன் யாழ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான மாணிப்பட்டம் (B.Sc) பெற்று தற்போது லண்டனில் மேற்படிப்பைத் தொடர்த்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தமகள் அம்பிகாதேவிக்கு தமது சொந்த மருமகனான அமரர்களான ஐயாத்துரை கமலாம்பிகை தம்பதியினரின் இரண்டாவது மகன் பரமநாதனுக்கு மணம்முடித்து வைத்தனர். இவர் மகாஜனாக் கல்லூரியில் கல்விகற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி (B.A) பட்டம் பெற்று ஆசிரியராகக் கடமையாற்றி பல பாடசாலைகளில் கற்பித்து இறுதியாக யூனியன் கல்லூரியில் உப அதிபராகக் கடமையாற்றி இப்பொழுது ஓய்வுபெற்றுள்ளார்.

இவர்களின் இல்லறத்தின் பயனாக கேசினி, சுரேசன், ருத்திரா தேவி, சேயோன் ஆகிய புத்திரச்செல்வங்களைப் பெற்றனர். கேசினி படிக்கும் காலத்தில் தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம் உட்பட பல பரிசில்களைப் பெற்றவர். தற்போது கொழும்பில் தேசிய வீடமைப்பு அதிகார சபையில் கணக்காளராகப் பணிபுரிகின்றார்.

சுன்னாகத்தில் விதானையாராக இருந்து அமரரான மண்டல நாயகம் இரத்தினதேவி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரன் கோணேஸ் வரனை கேசினிக்கு மணம்முடித்து வைத்தனர். இவர்களின் இல் வாழ்க்கைப் பயனாகப் பெற்ற குழந்தைக்கு மாதுமை எனப்பெயர் சூட்டி அருமை பெருமையாக வளர்த்து வருகின்றனர். மாதுமை கொழும்பில் கல்வி பயில்கின்றாள்.

சுரேசன் சித்த வைத்தியராக (B.S.M.S) யாழ்ப்பாணத்தில் கடமைபுரிகின்றார். இவர் ஆவரங்கால் கிராமசேவகர் துரைசிங்கம் சிவபாக்கியம் தம்பதியினரின் கனிஷ்ட புத்திரி கௌரியைத் திருமணம் செய்தார். கௌரி யாழ் தேசிய கல்வியியல் கல்லூரியில் விரிவுரை யாளராகக் கடமையாற்றுகின்றார்.

இளையமகள் ருத்திராதேவி யூனியன் கல்லூரியில் கல்விபயின்று கலைமாணி (B.A) சைவப்புலவர், சித்தாந்தபண்டிதர் பட்டங்களைப் பெற்று அக்கல்லூரியிலேயே ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

இளையமகன் சேயோன் யாழ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான மாணி (B.Sc Hons) பட்டம் பெற்று தற்போது கெயர் நிறுவனத்தில் பணிபுரிகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தமகள் சயதேவி மகாஜனாக் கல்லூரியில் கல்விகற்று, இந்தியா சென்று விஞ்ஞானமாணி (B.Sc) பட்டம் பெற்றார். இவர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியப் பணியைத் தொடங்கி பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மனையியல் ஆசிரியராகப் பயிற்சிபெற்று இராமநாதன் மகளிர் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் பொழுது திருமணம் நடைபெற்று பின்னர் அளுத்கம, பலாலி, கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலைகளில் விரிவுரை யாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்று தற்போது டென்மார்க்கில் வசிக்கின்றார்.

இவருக்குத் தொல்புரத்து அமரர் அப்பாத்துரை ஈஸ்வரி தம்பதியி னரின் மூத்தமகன் செல்வராஜாவைத் திருமணம் செய்து வைத்தனர். செல்வராஜன் அப்பொழுது நிலஅளவையாளராகத் தொழில் புரிந்தார். இவர்களின் இல்லறப்பயனாக சுஜாத்தா (உமா) வரலஷ்மி (ரமா) என்ற மக்கட் செல்வகளைப் பெற்றனர். இவர்கள் அம்மம்மா கற்ற உடுவில் மகளிர் கல்லூரியில் ஆரம்பக்கல்வியைக் பெற்று டென்மார்க் சென்று கல்வியைத் தொடர்ந்து தற்போது அங்கு தொழில் புரிகின்றனர்.

அடுத்த மகள் கலாதேவி பெயருக்கேற்ப பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி (B.A) பட்டமும், யாழ். பல்கலைக் கழகத்தில் முதுமாணி (M.A) பட்டமும், கொழும்பு பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்புளோமா பட்டமும் பெற்றவர். இவர் பல பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றி அட்டாளச் சேனை ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகச் சேர்ந்து கோப் பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் நீண்டகாலம் விரிவுரையா ராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ளார். இவருக்கு வடமராட்சி கரணவாய் பொன்னம்பலம் மயில்வாகனம் செல்லம்மா தம்பதியினரின் மூத்தமகன் பொன்னம்பலம் (ஆங்கில ஆசிரியர்) அவர்களைத் திருமணம் செய்து வைத்தனர்.

அடுத்தமகள் சகுந்தலாதேவியை உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியராக நீண்டகாலம் தொழில்புரிந்த அமரர் ஐயாத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபாத்தியாரின் மூத்தமகன் சத்தியபாலன் அவர்களுக்குத் திருமணம் செய்துவைத்தனர். இவர்களுக்கு கலையரசி, ரூபபாலன் என்ற இரு புத்திரச் செல்வங்கள் உள்ளனர். கலையரசி யூனியன் கல்லூரியில் கல்விகற்று தற்போது C.I.M.A கற்றுக்கொண்டிருக்கிறார். ரூபபாலன் தாய்வழிப்பேரன் சுந்தரவாத்தியார் படித்த யாழ் இந்துக் கல்லூரியில் கல்விகற்று தற்போது கணணிக் கல்வியை மேற்கொண்டுள்ளார்.

கனிஷ்ட புத்திரி லோகபாலினி மகாஜனாக் கல்லூரியில் கல்வி கற்று பலாலி ஆசிரிய கலாசாலையில் விஞ்ஞான ஆசிரியராகப் பயிற்சி பெற்று வெளிமாவட்டப் பாடசாலைகளில் கற்பித்து இறுதியாக யூனியன் கல்லூரியில் கற்பித்தார். இவருக்கு கைதடி அமரர் நாகலிங்கம் தம்பதியினரின் புதல்வன் ஸ்ரீரங்கநாதனைத் திருமணம் செய்து வைத்தனர். இவர்கள் தற்போது லண்டன் மாநகரில் வாழ்கின்றனர். இவர்களுக்கு பிரணவன், பிரதீபா என்ற இரு மக்கட்செல்வங்கள் உள்ளனர். இவர்கள் லண்டனில் கல்வி பயின்று வருகின்றனர்.

அண்மையில் அமரரான தையல்நாயகி அம்மையாரின் இல் வாழ்க்கை இப்படியாக மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என நிறைவான வாழ்வாக அமையப்பெற்றது.

சின்னத்தங்கச்சி, சின்னக்கா என உறவுகளால் அழைக்கப் பட்டவர். பின்னர் அம்மா, சின்னம்மா, மாமி, உபாத்தியார்மாமி, அம்மம்மா, பாட்டி என்ற பல பெயர்களால் உரிமையுடன் அழைக்கும் உறவுகளைப் பெற்றுக்கொண்டார்.

இவருடைய மருமக்கள் எல்லோரும் இவரை மாமியாராக அல்லாமல் தாயாகவே பாசத்துடன் நடந்தனர். இவர் மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்கு நல்ல சுவையான உணவுகளைத் தயார்செய்து கொடுத்து பாசத்துடன் பழகிவந்தார். கணவருடன் சேர்த்து தான தருமங்களைச் செய்து இல்வாழ்வை நல்வாழ்வாக வாழ்ந்து முடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீக வாழ்வு

இல்வாழ்க்கையில் தன் கடமைகளைச் செவ்வனவே செய்து வந்தது போல தன் வாழ்க்கைப் பயணத்தில் இறைபதம் அடைய வேண்டும் என்ற இலட்சியத்தை நோக்கியும், வாழ்வை நகர்த்திக் கொண்டார். குழந்தை குட்டிகளுடன் இருந்த காலத்திலேயே விரதங் களை ஒழுங்காகக் கடைப்பிடித்து வந்தார்.

காசிவிநாயகரின் சித்திரை மாதத்தில் நடைபெறும் மகோற்சவம் 10 நாட்களும் விரதமிருந்து காலை, மாலை தவறாது சென்று வழிபடுவார். வைகாசி விசாகத்திலன்று குருநாதசுவாமி கோயிலில் நடைபெறும் விசாகப்பொங்கலின் உபயகாரராக நின்று பொங்கிப் படைத்து உற்றார், உறவினருக்குக் கொடுத்து மகிழ்வார்.

மாவைக் கந்தனது மகோற்சவம் 25 நாள்களும் விரதமிருந்து கால்நடையாக ஆலயம் சென்று தரிசித்து வருவார். **'ஆடிச் செவ்வாய் தேடிப்பிடி'** என்ற வாக்குக்கிணங்க ஆடிச்செவ்வாய் தோறும் விரத மிருந்து துர்க்கை அப்பாளைத் தரிசிப்பார். துர்க்கை அம்பாள் மகோற்சவ காலங்களில் விரதமிருத்து தினமும் ஆலயம் சென்று வழிபடுவார்.

தினமும் காலையில் சூரிய வணக்கம் செய்யும் இவர் ஆவணி ஞாயிறு தோறும் விரதமிருந்து பொங்கிப்படைத்து வழிபடுவார். புரட்டாதிச்சனி, நவராத்திரி, கந்தசட்டி, ஐப்பசிவெள்ளி, கார்த்திகைச் சோமவாரம், திருவெம்பாவை, சிரவணஉபவாசம் போன்ற விரதங்களை தவறாது கடைப்பிடித்து வந்தார்.

சுவர்க்க வாயில் ஏகாதசி விரத்தை வல்லிபுரம் சென்று கடைப் பிடித்து நித்திரை விழித்திருந்து மறுநாள் பொங்கிப்படைத்து மேற் கொண்டு வருவார். மகாசிவாரத்திரிக்கு விரதமிருந்து கீரிமலை சென்று நான்கு ஜாமப் பூசைகளையும் தரிசித்து அதிகாலை தீர்த்தமாடி வருவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய தரிசனங்களை எடுத்து நோக்கும்போது முறிகண்டிப் பிள்ளையார், தில்லையம்பலப் பிள்ளையார் போன்ற விநாயகர் ஆலயங்களையும், முன்னேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், திருக் கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், காரைநகர் சிவன்கோயில் போன்ற சிவன்கோயில்களையும், நயினை நாகபூசணி, திருகோணமலை பத்திர காளி, மட்டுவில் பன்றித்தலைச்சி போன்ற அம்பாள் ஆலயங் களையும், கதிர்காமம், செல்வச்சந்நதி, நல்லூர் போன்ற முருகன் ஆலயங்களையும், பொன்னாலை வரதராஜப்பெருமாள், வல்லிபுரம் கிருஷ்ணன் கோயில் போன்ற விஷ்ணு ஆலயங்களையும் தரிசித்துள் ளார்.

மேலும் 1960 களில் மகள் சயதேவியுடன் தென்இந்தியா சென்று சிதம்பரம், திருக்கழுக்குன்றம், திருச்சி உச்சிப்பிள்ளையார், காஞ்சி புரம் காமாட்சி அம்மன், கபாலீஸ்வரர் போன்ற ஆலயங்களையும் தரிசனம் செய்துள்ளார்.

இவற்றைவிட வீட்டில் சிவபூசை, திருமுறைப்படிப்பு, புராணப் படிப்பு முதலியவற்றில் ஈடுபட்டுள்ளார். திருமண வைரவிழா சஷ்டியைப் பூர்த்தி கண்டு வாழ்ந்துள்ளார்.

இல்லற வாழ்வில் கணவனுடன் சேர்ந்து செய்த தானதருமங் களால் நிறைவு பெற்றது போலவே விரதாதிகளுடன் கூடிய ஆலய வழிபாட்டால் மனம் பக்குவமடைந்து பாசங்களிலிருந்து படிப்படியாக விடுபட்டு மஞ்சள் குங்குமத்துடன் தைமாத பூர்வபட்ச நவமியில் (27.01.2007) அதிகாலை இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

சுபம்

**அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்.**

\- குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணையாத தீபம்

பிறப்புண்டேல் இறப்புண்டு என்பது இயற்கையின் நியதி. சிலர் வாழும்போது காட்டிய பரிவு, வாழ்ந்தமுறை, கடைப்பிடித்த ஒழுக்க நெறி, ஆன்மீக பண்புகள் அவர்களை இழக்கும்போது ஈடுசெய்ய முடியாததாகவும் மனதிற்குத் துயரத்தை ஊட்டுவதாகவும் ஏற்பட்டு விடுகிறது. அந்தவகையில் எமது அருமை அன்னை அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்றாக அமைந்துள்ளது.

எனது அம்மா தையல்நாயகி, ஐயா இளைப்பாறிய ஆசிரியர் சுந்தரமூர்த்தி இருவருக்கும் நாங்கள் ஆறுபேர் பிள்ளைகள். ஐந்துபேர் பெண்கள், நான் ஒருவன் மட்டுமே ஆண்மகன். தாயின் தலைமகன் நான். எனக்கு முன்னர் ஓர் ஆணும் பின்னர் ஓர் ஆணுமாக இரண்டு பேர் பிறந்து சிறுவயதிலேயே இயற்கை எய்தினர். நான் ஒருவன் தான் ஆண் குழந்தையாக இருந்தமையால் கண்ணுங் கருத்துமாக என்னை வளர்த்து வந்தார்.

மெய் வருத்தம் பாராது, கண் துஞ்சாது, பசி நோக்காது அவர் என்னை ஆளாக்க எடுத்த சிரமம் சொல்லில் அடங்கா. ஒரு நாளாவது எம்மைக் கண்டித்ததோ, தண்டித்ததோ கிடையாது. அன்பாக அரவணைத்து, அறிவார்ந்த சொற்களால் எம்மைத் திருத்திச் சரியான நெறியில் வாழவைத்தார். அவரது அடி பற்றி நானும் என் சகோதரி களிடமும், பிற உறவினரிடமும் கடும் வார்த்தைகள் பேசாது அன்பாக நடந்து கொண்டேன். நான் கொழும்பில் கடமையாற்றும்போது மாதம் ஒரு முறையாவது அம்மாவைப் பார்க்கச் சென்று வருவது வழக்கம்.

மதியம் இரண்டேகால் மணியளவில் கொழும்புக் கோட்டை யிலிருந்து புறப்படும் உத்தரதேவி கடுகதி புகையிரதத்தில் தான் பிரயாணஞ் செய்வேன். சுன்னாகம் புகையிரத நிலையத்தில் இறங்கி கீரிமலை நோக்கிச் செல்லும் 795 ஆம் இலக்க பஸ்ஸைப் பிடித்து வீட்டுக்குச் செல்ல இரவு 11 மணிக்கு மேலாகி விடும். அதுவரை அம்மா உணவருந்தாது நான் வரும் வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பார். எனக்கு உணவு அளித்த பின்னரே தாம் உண்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்த முகம், கனிவான பேச்சு, இரக்ககுணம், உண்மைத்தன்மை ஆரவாரமற்ற அமைதியான சுபாவம், எல்லோரையும் மதிக்கும் பண்பு, கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம், விடாமுயற்சி என்பவற்றின் மொத்த வடிவமே என் அம்மா. ஆன்மீகத்துறையில் மிகுந்த நாட்ட முள்ளவர். விரதங்கள் இயமம் நியமம் தவறாதவர்.

வீட்டிற்கருகாமையிலுள்ள காசி விநாயகரிடம் மாறாத பக்தியுடையவர். விடியற் காலையில் நீராடி நியம அனுட்டானங்களை முடித்துக் காசிப் பிள்ளையார் கோயிலுக்கு சென்று வலம்வந்து வணங்கிய பின்னர் தான் காலைத்தேநீர் அருந்துவார்.

பிற உயிரை எல்லாம் தன்னுயிர் போலக் கருதும் அன்புள்ளம் கொண்டவராதலால் காலை, மதிய உணவருந்தமுன்னர், காகம், செண்பகம், அணில், புலினி என்பவற்றிற்கு உணவளித்து தானுண்பார்.

அக்குருவிகளுக்கு நியமந் தவறாமல் உணவளித்து வந்தமையால் சிறிதுகாலந் தாழ்த்தினாலும் அவை குரலெழுப்பி அம்மாவைக் கூப்பிடும். அம்மா ஓடோடி வந்து உணவளிப்பார். பகிர்ந்து உண்ணும் சுபாவம் உள்ளவர். ஆரவாரமற்ற அமைதியான வாழ்க்கை தான் அவர் எமக்குக் கற்றுத்தந்த பாடம்

இத்தகைய அன்புள்ளங் கொண்ட அன்னையின் அருகிலிருந்து அவரை இறுதிக் காலத்தில் கவனிக்க முடியாமல் போயிற்றே என்ற - பெரும் மனக்கவலை எனக்கு என்றுமுள்ளது.

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்'**

என்ற பொய்யா மொழிக்கேற்ப அவர் ஆத்மா இறைவனின் பாதாரவிந்தங்களை அடையும் என்பது திண்ணம். பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய் வாழ்ந்த என் அன்னையின் நினைவு. அணையாத தீபமாக எம் உள்ளங்களில் என்றும் ஒளி வீசிக் கொண்டிருக்கும்.

27, நெல்சன் இடம்,
கொழும்பு – 06

மகன்
சு. வெற்றிவேலாயுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமை மகள் இந்திராவின் புலம்பல்

**ஐயிரண்டு திங்கள் அங்கமெலாம் நொந்து பெற்றுப்**
**பையலென்றபோதே பரிந்தெடுத்துச் செய்யவிரு**
**கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை**
**எப்பிறப்பிற் காண்பேனினி?**

எங்கள் அருமை அம்மாவே எங்கே சென்றீர்கள் எம்மைத் தவிக்கவிட்டு? இனியெங்கே நாம் உங்களைக் காண்பது இப்பூவுலகில்? உங்கள் அருமை மகள் இந்திராவையும் விட்டு, அதிலும் அருமையாக வளர்த்த பேர்த்திமாரையும் விட்டு எம்மிலும் மேலானவரைத் தேடிச் சென்றீர்களோ?

சென்ற மார்கழி மாதம் உங்கு வருவதற்கான முயற்சிகள் எடுத்தேன். வந்திருந்தால் ஒருவேளை உங்களுடன் இறுதி நேரத்தில் இருந்திருப்பேன். ஆனால் அதற்கெல்லாம் கொடுப்பனவு இல்லையென்றுதான் என் பயணம் குழம்பியதோ?

அருமையுடன் பெற்றெடுத்து, பாசத்துடன் வளர்த்து, பல்கலையும் கற்றுவா எனப் பாரதத்திற்கு அனுப்பிப் பட்டமும் பெறவைத்தீர்கள். பொன்னும் நிலமும் சீராகத் தந்ததுடன் பொருத்தமான வாழ்க்கைத் துணையையும் தேடிக்கொடுத்தீர்கள். உங்கள் பேர்த்திமாரை நான் வயிற்றில் சுமந்தபோதும், பெற்றெடுத்த போதும் பெரும் துணையாக இருந்தீர்கள்.

அத்துடன் அமையாது பேர்த்திமாரைப் பொறுப்பெடுத்துக் கொண்டு நான் என் தொழிலைச் செம்மையாக ஆற்றவும். மேற்கல்வி கற்கவும் தூண்டுகோலாக இருந்தீர்கள்.

என் பிள்ளைகள் நீங்கள் கல்வி கற்ற பாடசாலையிலேயே பயில வைக்கவேண்டும் என விரும்பி உடுவில் மகளிர் பாடசாலையில் சேர்த்தீர்கள். பின்னர், நாட்டுக்குச் சேவை செய்வதற்கும் இல்வாழ்க்கை தான் உறுதுணை என உணர்த்தி, அந்த நோக்கில் வெளிநாட்டிற்கும் அனுப்பி வைத்தீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனைக்கும் நான் என்ன கைமாறு செய்ய முடிந்தது? பெற்ற தாய்க்கு யாராலுமே பிரதியுபகாரம் செய்ய முடியாது தான். நாளெல்லாம் எம் உயர்வுக்காய் பாடுபட்ட எம் அன்னைக்கு என்னால் செய்ய முடிந்தது மிகச் சொற்பமே. அதற்கும் பிரதான காரணம் அவரின் இயல்புதான்.

நன்றாக இருந்த காலத்தில் பிறருக்குச் சேவை செய்வதேயே விரும்பிய அவர், இயலாத காலத்தில் தன் தேவைகளை, ஆசை களைச் சுருக்கி மிகவும் எளிமையாகவே வாழ்ந்தார். இங்கிருந்து ஐந்து தடவை ஊருக்குச் சென்று என் பெற்றோருடன் தான் தங்கியிருந்தேன் என்றாலும் பெரிதாக எதுவும் செய்தேன் என்பதற்கு மில்லை. அதற்கெல்லாம் பெரிதாக அவர் இடம் தரவில்லை.

பிறந்தவர் இறப்பது உலக நியதி என்பதை எண்ணி என்மனதைத் தேற்றி, எம் அன்னையின் நற்பண்புகளையும், நல்வழிகாட்டல்களை யும் எமக்கு ஆதாரமாக மனதில் நிலைநிறுத்தி, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

மகள்
இந்திரா

* கோபத்தோடு எழுந்திருப்பவன், துன்பத்தோடு உறங்குவான்.

* துன்பத்தை எதிர்க்கத் துணியாதவர் வாழ்வில் தோல்வியே அடைவர்.

* பொறுமை என்பது கசப்பு, ஆனால் அதன் கனியே இனிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் அன்னைக்கோர் நினைவாலயம்

தொண்ணூற்று நான்கு வருடங்கள் நடமாடிய அம்மாவின் உடல் குளிப்பாட்டி, கும்பநீர் ஊற்றிச் சுத்திசெய்து, சேலை உடுத்து மாலை சூட்டி அலங்கரித்து, வாய்க்கரிசி போட்டு, சுற்றிவந்து வணங்கி வழிபட்டு, அந்தியேட்டிக் கிரியைகள் செய்து, சிவமயமாக்கி, தீ மூட்டி எரிக்கப்பட்டு சாம்பலும் கடலுள் சங்கமமாகிவிட்டது. தூல உடல் மறைந்தாலும் சூக்கும உடலுடன் உலா வருவார் என்ற நம்பிக்கையில் அம்மாவின் மகள் இராணி கருங்கல் வைத்து விளக்கேற்றி உணவு படைத்து வழிபட்டு வருகிறார்.

கல்லெடுப்புடன் கல்லும் கடலுள் போய்விடும். ஆனாலும் எம்மால் அம்மாவை மறக்கமுடியுமா? அம்மா இல்லாத பொழுதுதான் அவவின் ஒவ்வொரு செயலும், குழந்தையாக இருந்து நாம் வளர்ந்த காலகட்டத்தில் அவவுடனான தொடர்புகள் எல்லாம் **'வீடியோ'** காட்சியாக எம் மனதில் விரிகின்றன.

அம்மாவின் பிள்ளைகளுள் நான் நடுப்பிள்ளை. எனக்கு ஒரு அண்ணாவும், இரு அக்காமாரும், தம்பியும், இரு தங்கைகளும் இருந்தனர். நான் 1942 ஆம் ஆண்டு பிறந்தேன். எனக்கு நேரே இளையதம்பி பாலச்சந்திரன் ஆறுவயது வரை எம்முடன் இருந்தார்.

தம்பியின் அழகான சிவந்த தோற்றமும், புத்திக் கூர்மையும், சொல் வன்மையும், விவேகமான விளையாட்டுச் செயல்களும் இன்றும் என் மனதில் பசுமையாக உள்ளன.

எனக்கு ஒன்பது வயதுவரை தம்பியுடன் விளையாடியது, பள்ளிக்கூடம் போனது, தம்பி நோய்வாய்ப்பட்டு மூளாய் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றது, ஓரளவு சுக மடைந்தநிலையில் திடீரென ஒரு நாள் (1951ல்) காலையில் காலமானது எல்லாமே மனதில் வருகிறது. தம்பிக்குப் பின் இப்போது அம்மாவை இழந்து நிற்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதில் தம்பி போன சோகத்தில், அம்மா மனம் துடித்து கதறி அழுததைப் பார்த்திருக்கிறேன். சிறு குழந்தைகளான என் தங்கைமார் அம்மாவைச் சுற்றிவந்து அலமலந்து அண்ணார்ந்து பார்த்தால், அவர்களைத் தூக்கி அணைத்து கவனிப்பதில் தன் கவலைகளை மறந்து விடுவா. காலப்போக்கில் தன்னைத் தேற்றிக் கொண்டார். ஆனால் அம்மா 80 வயதில் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து சென்றபொழுது தன் சொந்த இடத்திற்கு, தான் வாழ்ந்த வீட்டிற்குத் திரும்ப வேண்டும் என்று மனம் துடித்த பொழுது எம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இடம்பெயர்ந்து, உரும் பிராயில், வடமராட்சியில் இருந்த காலங்களில் அம்மாவின் ஒரேகுறிக் கோள் தன் சொந்தஇடம் **'இயாமா வளவிற்கு'** திரும்பச் செல்ல வேண்டும் என்பது தான். **'தெல்லிப்பழைக்குப் போகவேண்டும்'** என்பது தான் அம்மாவின் ஒரே புலம்பல்.

1992 ஆம் அண்டு தை மாதம் மூல நட்சத்திரத்தன்று, அவவின் 80 ஆவது வயது தொடக்கத்தில் முற்றத்தில் பொங்கிப்படைத்து சூரியனை வழிபட்டு, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், சிவ பூஜை அருச்சனை என்பவற்றை மாவை ஆதீனத்து வைத்தியநாதக் குருக்கள் தம்பதியினர் நடாத்தி வைத்தனர். அவ்வாண்டு வைகாசி அமாவாசையன்று நாங்கள் இடம்பெயரவேண்டி ஏற்பட்டது. அதற்கு முன் சிலகாலமாக ஹெலி சூடு, செல்வீச்சுகளுக்கு மத்தியில் வாழவேண்டி ஏற்பட்டது.

ஆகாயத்தில் விமானச் சத்தம், ஹெலி சத்தம் கேட்டதுமே பெரியம்மா வீட்டிலுள்ளோர் மற்றும் அவ்விடத்தில் நிற்போர் எல்லோ ரும் பாதுகாப்புத்தேடி வீட்டின் முன் உள்ள சீமெந்து மேற்தளத்தின் கீழ் கூடிவிடுவர். அம்மா மாத்திரம் அதனைப் பொருட்படுத்தாது தன் வேலைகளில் ஈடபட்டு இருப்பா. சிவமூலமந்திரத்தை மனதில் உச்ச ரித்துக் கொண்டிருந்தால் ஒரு தீங்கும் வரமாட்டாது. **'சிவசிவ'** என்று சொல்லிக் கொண்டு இருங்கோ **'யாமா'**வில் ஒன்றும் நடக்காது என்ற நம்பிக்கையுடன் இருப்பா. குண்டு வீச்சு, ஷெல் வீழ்ந்து வெடிக்கும் பெரும் சத்தங்களையும் பொருட்படுத்தாது தம் காரியங்களைச் செய்வார். அப்படி ஒரு மனபக்குவம் அவவிற்கு வாய்த்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998 ஆம் ஆண்டு தை மாதம் காசிப்பிள்ளையார் கோயில் பிராயச்சித்த கும்பாபிடேகம் நடைபெற்று, தொடர்ந்து சித்திரையில் மகோற்சவம் நடைபெற்றது. சித்திரையில் நாங்கள் எங்கள் வீட்டில் மீளக்குடியமர்ந்து திருத்தவேலைகளைச் செய்துவந்தோம். ஓரளவுக்கு வீட்டைத் திருத்தி, வளவையும் துப்பரவு செய்த நிலையில் அடுத்த தை மாதம் அம்மா எங்களுடன் வந்து தங்கியிருந்தார். உயர் பாது காப்பு வலய சூனியப் பிரதேசத்தில், பகலில் நாங்கள் இருவரும் வேலைக்குப் போய்விட்டால் அம்மா தனியாகவே இருந்தார். சிறிது காலத்துள் செண்பகம், காகம், புலுனி, அணில் என ஒரு கூட்டத் தையே தன்னைச் சுற்றி இருக்க பழக்கப்படுத்தி விட்டார். வீட்டு மரங்களும், குருவிகளும், பிராணிகளும் தான் அவவிற்குத் துணையாக இருந்தன.

அம்மாவின் தொண்ணூறாவது வயதில் 2003 ஆம் ஆண்டு ஆனிமாதம் குருநாதசுவாமி கோயில் கும்பாபிடேகம் நடைபெற்றது. ஐயாவுடன் கோயில் படியேறி உள் சென்று விக்கிரகங்கள் எல்லா வற்றிற்கும் எண்ணைக்காப்புச் சாத்தி மனநிறைவு கொண்டார்.

கும்பாபிசேகதினத்தன்று விடியவே எழுந்து குளித்து கோயிலுக் குச் சென்று தரிசனம் செய்து கொண்டார். 1977 ஆம் ஆண்டு ஐயாவுடன் முனிஸ்வரம் சென்று பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் செய்த வசந்தநவராத்திரி சண்டி ஹோமத்தையும் இரவு தங்கியிருந்து தரிசித்து வந்ததையும் நினைவுகூறுகிறேன். தொண்ணூற்றி இரண்டு வயதுவரை அம்மா கோயில்களுக்குச் சென்று வழிபட்டு வந்தார்.

2004 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் தன் வீட்டிற்குச் சென்ற பின்தான் அவவிற்கு மனநிறைவு. தன் வீட்டில் தன் அறையில் படுத்து உறங்கக் கூடியதாக வந்ததும் அவவின் மனதில் நிறைவு ஏற்பட்டது. காசிப்பிள்ளையார் மணியோசை, துர்க்கை அம்மன் மணி ஓசை, குருநாதர்சுவாமி மணியோசை, வைரவர் மணியோசைகளைக் கேட்டு மனதில் வழிபட்டுக் கொண்டு மிக அமைதியாக வாழ்ந்தார்.

எம்மையெல்லாம் பத்துமாதம் சுமந்து பாலூட்டி சீராட்டி வளர் த்து, உணவூட்டி, கல்வி கற்பித்து, வளர்த்துவிட்ட அம்மாவிற்கு நாம் என்ன கைம்மாறு செய்யமுடியும்? வளரும் காலத்தில் ஐயாவுடன் நாங்கள் எல்லோருமே ஒன்றாக இருந்து உணவருந்துவது வழக்கம். அம்மா பரிமாறுவதை எல்லோரும் சாப்பிடவேண்டும், கொட்டக்கூடாது என்பதில் ஐயா கண்டிப்பாக இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா பரிமாறும் பொழுது எந்தப் பிள்ளைக்கு எது பிடிக்குமோ அதைக் கூடுதலாகவும், எது பிடிக்காதோ அதைக் குறைவாகவும் பரிமாறி விடுவார் பலாக்காய்கறி சின்னக்காவுக்குப் பிடிக்காது. அவவுக்கு பரிமாறுவதாக சிறிதளவு போட்டுவிட்டு அருகில் இருக்கும் எனக்கு அவவின் பங்கையும் சேர்த்துப்போட்டு விடுவா. எனக்கு விருப்பமான கறி நிறையப் போட்டதில் எனக்குத் திருப்தி, அவவிற்கு பிடிக்காததை குறையப் போட்டதில் திருப்தி. பிள்ளைகளின் ருசி, சுவை அறிந்து உணவு அளிப்பது போல எல்லா விடயங்களிலும் அவரவரின் குணவியல்புகளுக்குகேற்ப நடந்து கொள்வா. இதனால் எல்லாப் பிள்ளைகளுமே அம்மா தன்னிடம்தான் மிகப் பாசமாக நடந்து கொள்கிறார் என்ற உணர்வைப் பெற்றுக் கொள்வர். பிள்ளை கள் மட்டுமல்ல, மருமக்கள், பேரப்பிள்ளைகள் கூட அம்மா எங்களைத் தனித் தனியாக கவனித்துக் கொள்வதை மறக்க மாட்டார்கள்.

எங்கள் அம்மாவிற்கு பூர்வபுண்ணியப் பயனாய் நல்ல உடல் ஆரோக்கியமும், உளவளமும் வாய்க்கப் பெற்றிருந்தது. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாசொல் என்ற இந்த நான்கு மனக்குற்றங்களும் அம்மாவிடம் இயல்பாகவே இல்லாமல் இருந்தது. அவயாரையும், புறங்கூறுவதே கிடையாது, அயலவர்களுடன் எப்பொழுதும் நல்ல மனத்துடன் பழகிவந்தார்.

அம்மா வாழ்நாளில் எதற்கும் ஆசைப்பட்டு அங்கலாய்த் ததே கிடையாது. கோயிலுக்குப் போகும் போது மட்டும் ஐயாவிடம் காசு பணம் கேட்பா. சேலைவேண்டும், நகைவேண்டும் என்றோ அல்லது வேறேதாவது வேண்டும் என்றோ கேட்டதே கிடையாது. பொய் பேசுவது கிடையாது. அம்மா எப்பொழுதும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டே இருப்பார். நினைத்த காரியத்தைச் சாதிக்கும் வல்லமை உடையவர்.

(1950) ஐம்பதுகளில் தம்பி போன சோகத்தில் இருக்கிற பிள்ளைகளை நல்லபடியாக வளர்க்கவேண்டும் என்ற நோக்கிலோ, என்னவோ, எங்களை கோழி தன் குஞ்சுகளைச் செட்டைக்குள் பாதுகாத்து வளர்ப்பது போல் கண்ணும் கருத்துமாக வளர்த்தார். உணவூட்டி உடலை வளர்த்தது போலே கல்வியூட்டி அறிவையும் வளர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிநூற் பாடல்கள் சொல்லித்தருவார். வாசிக்கப் பழக்குவார் அம்மாவின் அப்பா (பேரன் அமரர் வேலுப்பிள்ளை) காலத்தில் சரசாலையிலிருந்து வருபவர்கள் இரவில் பாரதம் படிப்பதையும், விளைக்கை அணைத்து விட்டு கிழக்கு வெளிக்க கிளம்பிவிடுவதையும் கூறக் கேட்டிருக்கிறேன்.

பாரதம் பெரிய எழுத்து நாலுகட்டு புத்தகம் வீட்டிலிருந்ததையும் அறிவேன். வாசிக்கும் பழக்கத்தை அவ கடைசிவரை கைவிடவில்லை. இராமாயண பாரதக் கதைகள், புராணக் கதைகளை எல்லாம் சொல்லித் தருவார். பழமொழிகளை தக்க சமயத்தில் எடுத்துக்கூறுவார். அம்மா தாம்பெற்ற கல்வியைப் பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் வழங்கியுள்ளார்.

அம்மா, ஐயாவிற்கு நல்ல வாழ்க்கைத் துணைவியாக வாழ்ந்துள்ளார். அவர்கள் வாழ்ந்து காட்டிய முறை எங்களுக்கும் வழிகாட்டியாக அமைந்தது. ஐயா எப்பொழுதும் அம்மாவின் நலனைக் கவனித்துக் கொள்வார். அம்மாவும் ஐயாவின் செயல்களுக்குப் பின்னால் நின்று உதவுவார்.

ஐயாவின் உறைப்பான சைவப்பழக்கங்கள் அம்மா வின் ஆன்மீக வளர்ச்சிக்குப் பெரிதும் துணைநின்றன. அம்மா ஐயாவுடன் எழுபத்திரண்டு ஆண்டுகள் பூரணமாக வாழ்ந்துள்ளார். அம்மாவுக்கு நீண்ட ஆயுள், நல்லதேக ஆரோக்கியம், நன்மக்கள், நல்லசந்ததி, இல்லற வாழ்வு, பகைவரே இல்லாதநிலை, இறை உணர்வு எல்லாமே வாய்க்கப் பெற்றிருந்தன. அம்மாவின் வாழ்வு ஒரு பூரண வாழ்வு.

கடைசிக் காலத்தில் அம்மா மனநிறைவுடன் அமைதியாக தன் வீட்டில் வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதும் மஞ்சள் குங்கு மத்துடன் பூவும் பொட்டுமாக ஐயாவே கிரியை செய்து வழியனுப்பும் பேறு பெற்றார்.

அம்மாவின் கிரியைகள் நடக்கும் பொழுது மழை தூறி வானமும் வரவேற்றது. அம்மா எம் நினைவுகளில் தெய்வமாகி என்றென்றும் எம்மை ரஷித்துக் கொண்டிருப்பார் என்ற நம்பிக்கை எம்மை அமைதியடையச் செய்கிறது.

**அம்மாவின் மகள்**

**கலா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா என்று அழைத்தால் வருவாயோ?

அன்பாகக் கதைத்தும் கெஞ்சிக் கேட்டும் உணவு தனை உண்ண வைத்த கதையைச் சொல்வேனோ? அறிவுப் பசி தீர பல அருமைக் கதைகளைச் சொல்லியும், நீதியான வாழ்க்கை வாழ வேண்டுமென பல நீதிநூல்களில் உள்ள பொருள்களை எடுத்துக் கூறியதைத்தான் சொல்வேனோ?

வெளியே சென்ற மகள் இன்னும் வரவில்லையே என்று படலையில் காத்துநின்ற கதையைச் சொல்வேனோ?

வெளி ஊரில் படிப்பித்துவிட்டு வீடு வரும்வேளையில் விதம் விதமாக சமைத்து வைத்து அருகில் இருந்து பல கதைகளும் சொல்லிப் பரிமாறியதைச் சொல்வேனோ? எவ்வளவு தான் பிழைகள் செய்தபோதும் இன்முகம் காட்டி அன்பாகப் பேசி, பண்பாகப் அறிவுரைகள் கூறி நீயும் இவ்வாறு நடக்க வேண்டும் என்று சொல்லாமல் வாழ்ந்து காட்டியமுறையை மகிழ்ச்சி பொங்கச் சொல்வேனோ?

உங்களுக்குத் தரும் பொருள்களை உங்கள் மக்கள் அல்லது பேரப்பிள்ளைகளுக்காக ஒழித்துவைத்து அவர்களிடம் கொடுக்கும் உங்கள் இரக்கத்தை பாசஉணர்வைப் பற்றிக்கூறுவதா?

இப்படி ஒன்றல்ல பலப்பல.... எதைக் கூறுவது?

உங்களைப் பார்க்க ஐந்து முறை பறந்து ஓடிவந்தேன். உங்கள் இறுதி மரியாதைக்கும் நான் செல்லவேண்டும் என்று கூறிக்கொண்டே இருந்தேன். அதை அறிந்தோ தெரியவில்லை முதல் நாள் வியாழன் இரவு என் கனவில் வந்து உங்களுக்கு எல்லோரும் மாலை போடப்போகிறார்கள் உனக்கு மாலை போடக் கிடையாது என்பதை உணர்த்தி பிரியாவிடை சொல்ல வந்தீர்களா?

அந்தவேளையில் அதை என்னால் அறியமுடியவில்லை. அடுத்தநாள் விடியற்காலையில் தான் அதை என்னால் உணரமுடிந்தது.

உங்கள் ஆத்மா சாந்தி அடையவேண்டும் என்று எல்லாம் வல்ல காசி விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

**உங்கள் இளைய மகள்**

**குஞ்சு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமையான அம்மம்மா

செந்தமிழும் சைவமும் செழித்தோங்கி அறம் போற்றும் பரம்பரையில் வந்துதித்து என்னை அன்புகாட்டி அரவணைத்த அம்மம்மா இன்று இப்பூவுலகில் இருந்து இறையுலகம் சென்று விட்டார். என் மனம் பின் நோக்கிச் செல்கின்றது. நான் இவ்வுலகில் பிறந்ததும் முதன் முதலில் என்னைத் தூக்கிப் பராமரித்தது அம்மம்மா.

பருவமடைந்தபோதும் முதலில் தோயவார்த்ததும் அம்மம்மா. திருமணஞ் செய்தபோதும் முதலில் ஆசிர்வதித்ததும் அம்மம்மா. படிக்கும் போதும், பரிசில்கள் பெற்றபோதும், உத்தியோகம் கிடைத்த போதும் மிகவும் மகிழ்ச்சியடைந்தவர் அம்மம்மா.

மிகவும் பொறுமைசாலியான அம்மம்மா நிறைந்த ஆசார முடையவர். காலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்து, குளித்து, பூக்களைப் பறித்துக்கொண்டு காசி விநாயகரிடம் சென்று வணங்கிவந்த பின்தான் காலைத் தேநீர் அருந்துவார்.

நாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் இடம்பெயர வேண்டி ஏற்பட்டது. இடம்பெயர்வால் காசி விநாயகரிடம் தினசரி செல்ல முடியாமல் போயிற்று. இதனால் அவர் மிகவும் மனமுடைந்து போயிருந்தார். அவரிடம் கதைப்போர் எல்லோரிடமும் அவர் விடுத்த கோரிக்கை **'என்னைத் தெல்லிப்பழையில் கொண்டுபோய் விடுங்கோ'** என்பதுதான்.

இதிலிருந்து அம்மம்மா காசி விநாயகரையும் தன்னுடைய வீட்டையும் கிராமத்தையும் எவ்வளவு நேசித்தார் என்பது புலனாகும்.

அவருடைய ஆசை வீணாகவில்லை. மனமொன்றிய பிராத்தனை யினால் மீண்டும் அவருடைய இல்லத்தில் வசிக்கக்கூடிய சூழ்நிலை உருவானது. அவரின் விருப்பப்படியே அவரின் இல்லத்திலிருந்து பூவோடும் பொட்டோடும் இறுதி யாத்திரை ஆரம்பமானது. இடப்பெயர் வில்லையெனில் நிச்சயமாக ஆயிரம் பிறைகண்ட தம்பதிகளாக நூறு வயதுக்கு மேல் வாழ்ந்திருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'யாமாப்பாட்டி'** என அனைவராலும் அன்பாக அழைக்கப்பட்டவர் என் அம்மம்மா. வீட்டிற்கு வருபவர்கள் எல்லோருடனும் அன்பாகப்பழகி, இனிமையாகப் பேசி. நன்றாக உபசரிப்பார். அவருடைய நற்குண, நற்பழக்கவழக்கங்கள் தான் அவருக்கு 95 வயதுவரை நீண்ட ஆயுளைக் கொடுத்தன.

தன்னுடைய தள்ளாத வயதிலும் அனைவரையும் உபசரித்தவர். நான் இறுதியாக அவரைப் பார்க்கச் சென்றிருந்தபோது, முதலில் என்னை அடையாளங் காணவில்லை. நான் குரல் கொடுத்ததும், **'பபி'** எனக் கூப்பிட்டு கைகளைப் பற்றிக் கொண்டார். அவருடைய நினைவுகள் என்றும் பசுமையானவை. காலத்தால் அழியாதவை.

இல்லற வாழ்க்கையில் 72 வருடங்களைப் பூர்த்திசெய்து கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என ஒரு பெருவிருட்சத்தையே தன் அன்பினால் தாங்கியவர். எல்லோருக்கும் தேவையான கருமங்கள் யாவற்றையும் எவ்வித குறையுமின்றி நிறைவுசெய்து, நிறைவாழ்வு வாழ்ந்து, நிம்மதியாக இறைவனடி சேர்ந்துவிட்டார்.

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்'** என்ற குறளுக்கிணங்க

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, இன்று எம் எல்லோர் மனத்திலும் தெய்வமாகிவிட்டார்.

அறவழியில், உயர்ந்த ஒழுக்கத்துடன் வாழ்ந்து, அவரின் நற்பண்புகளைப் பின்பற்றுவதே நாம் அவரிற்குச் செய்யும் கைம்மாறாகும்.

– மூத்த பேர்த்தி
**கேசினி. கோ.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்குதான் தேடுவதோ?

பெற்ற அன்னையிலும் மேலான பாசத்துடன், பரிவுடன், கனிவுடன் எம்மை அரவணைத்து அமுதூட்டிச் சீராட்டி, பாதுகாத்து, எழுத்தறிவித்து ஆளாக்கிய எமது அம்மம்மா இன்று இல்லையே என்று கேள்விப்பட்டவுடன் அதிர்ந்து போய்விட்டன். அலறி அழ எம்மை விட்டுவிட்டு எங்குதான் சென்றீரோ?

இந்த ஆண்டு கோடை விடுமுறையின்போது உங்களை வந்து பார்க்க முடியும் என்ற ஒரு சிறு நம்பிக்கையுடன் இருந்த என்னை ஏமாற்றி விட்டீரே? உங்களுடன் இனிமையாக வாழ்ந்த காலத்தை திரைப்படம் போன்று எண்ணிப் பார்த்து நான் ஏங்க, நீங்கள் உங்கள் கடமை முடிந்துவிட்டது என்று சொல்லாமல் கொள்ளாமல் அவன் பாதம் நாடிச் சென்று விட்டீர்களா? உங்கள் திருமுகத்தைக் காணத் துடிக்கின்றேன். வாஞ்சையுடன் உங்கள் அன்பு உருவத்தை அணைத்துக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

எமது அம்மம்மாவிடம் எல்லா நற்பண்புகளும் அமைந்திருந்தன. இறையன்புடனும், சிறந்த பண்புகளுடனும் நாம் வாழ நல்ல முன் உதாரணமாகத் தான் திகழ்ந்தார். **'கிழமைப்பட வாழ்'** என்ற முதுமொழிக்கிணங்கத் தான் மட்டும் வாழ்ந்தால் போதாது, பிறரும் நல்லபடி வாழவேண்டும் என்ற பரந்த நோக்கும் கொண்டிருந்தார்.

எப்பொழுதும் தேவாரத் திருமுறைகளிலிருந்தோ நீதிநூல்களிலிருந்தோ பாடல்கள் சொல்லுவார். அவற்றின்படி அவர் வாழ்ந்தும் காட்டியுள்ளார். அவற்றினில் என் மனதில் மிகவும் நன்றாகப் பதிந்துள்ள ஒன்று இத்திருமந்திரப் பாடல்

**யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒரு பச்சிலை**
**யாவர்க்கும் ஆம் பசுவிற்கு ஒரு வாயுறை**
**யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி**
**யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலுக்கமைய எமது அம்மம்மா இறைவனையும், கூட வாழ்ந்த மக்களையும் மட்டுமல்லாது வாயில்லா சீவராசிகளையும் அன்புடன் அணைத்து, இன்மொழி பேசி வாழ்ந்தார். வேலைகள் முடிந்து ஓய்வு கிடைக்கும்போது வளவிற்குள் உலாவி அங்கு நிறைந்து நின்ற மரங்கள், செடிகொடிகளுடனும் அளவளாவிக் கவனிப்பார். இப்பேர்ப் பட்ட அருமை அம்மம்மாவுடன் 2004 ஆம் ஆண்டில் சில மாதங்கள் கழிக்க முடிந்தது எனது பாக்கியம்.

அன்று அவர் நோய் வாய்ப்பட்டிருந்தபோது ஒரு எள்ளளவு உதவிசெய்ய முடிந்தது. கடலைச் சிறுதுளியால் நிரப்பமுடியுமோ? என்னைப் பாசத்துடன் சீராட்டிப் பாராட்டிய என் அம்மம்மாவிற்கு நான் எங்குதான் கைமாறு செய்வதோ? என் அம்மம்மாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**–உங்கள் பிரிவால் துயருறும் அருமைப் பேர்த்தி**

**உமா.**

## பொன் மொழிகள்

| | | |
|---|---|---|
| வருவதும் போவதும் இரண்டு | - | இன்பம், துன்பம் |
| வந்தால் போகாதது இரண்டு | - | புகழ், பழி |
| போனால் வராதது இரண்டு | - | மானம், உயிர் |
| தானாக வருவது இரண்டு | - | மூப்பு , இளமை |
| நம்முடன் வருவது இரண்டு | - | பாவம் , புண்ணியம் |
| அடக்க முடியாதது இரண்டு | - | ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதது இரண்டு | - | பசி, தாகம் |
| பிரிக்க முடியாதது இரண்டு | - | பந்தம், பாசம் |
| அழிவைத்தருவது இரண்டு | - | பொறாமை, கோபம் |
| எல்லோருக்கும் சமமானது இரண்டு | - | பிறப்பு, இறப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேர்த்தி ரமாவின் கண்ணீர் அஞ்சலி

தங்கம் என்று செல்லப் பேரிட்டுப் பாலூட்டிச் சீராட்டி, அணைத்தெடுத்து, அன்புமொழி சொல்லி, கண்ணின் மணிபோல எனைக் காத்துப் பாடஞ் சொல்லித் தந்து பள்ளிக்கு அனுப்பியதுடன். தெய்வபக்தியும், நன்னெறியும் போதித்து, இனிய பாடல்களும் கற்பித்த எமது இனிய அம்மம்மா எம்மைத் தவிக்கவிட்டு மறைந்து விட்டாவே.

அந்த நாளில் நாம் பள்ளியால் வரும் நேரம் படலையில் காத்திருந்து அழைத்துச் சென்று சோர்வு போக்கி, உணவு ஊட்டி, எமது கதைகளைச் சிரத்தையுடன் கேட்டு இன்புற்ற அம்மம்மாவே ஏன் சொல்லாமல் சென்றீர்?

காசிப் பிள்ளையாரிடமும், துர்க்கையம்பாளிடமும் அழைத்துச் சென்று அந்நாளிலேயே கோயில் வழிபாட்டினையும் கூட்டுப் பிரார்த்தனையையும், எம்மிடம் ஊக்குவித்தீர்களே. இன்று இங்கு பெற்ற பிள்ளைகளும், பேரரும் கண்ணீர்விட்டு அழ எங்குதான் சென்றீரோ?

எமது அம்மம்மாவின் இடத்தை யாரால் நிரப்பமுடியும்? அன்பு உள்ளம், இன்முகம், ஈகை, ஏழ்மைக்கு இரங்குதல், மற்றும் ஓயாத சுறுசுறுப்பு இவற்றுடன் ஆழ்ந்த கடவுள் பக்தி இவை சேர்ந்த உரு வமே எமது அம்மம்மா. மற்றவர் மனம் நோவதைப் பொறுக்க மாட்டா தவர். இப்படிப்பட்ட அம்மம்மாவை இன்று நாம் இழந்து வறியவராகி விட்டோமே.

எமது இனிய அம்மம்மா என் பணி முடிந்துவிட்டது, இனி நான் பிறருக்குப் பாரமாக இருக்க விரும்பவில்லை என்று சொல்லா மல் சொல்லிப் போய்விட்டா. அப்படிப்பட்ட புனித அம்மம்மாவிற்கு எனது கண்ணீர் அஞ்சலிகள். அவர் நித்தமும் வணங்கிய இறைவனின் பாதங்களைப் பற்றி ஆத்ம சாந்தியடைய அந்த இறைவனையே வேண்டுகின்றேன்.

பேர்த்தி – ரமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்புத் தெய்வம் அம்மம்மா

குழந்தையின் சிரிப்பில் தெய்வத்தைக் காணலாம் என்பர், நாம் எங்கள் அம்மம்மாவின் சிரிப்பில் தெய்வத்தைக் கண்டு அகமகிழ்ந் தோம். அம்மம்மாவின் மலர்ந்த முகமும், குளிர்ந்த சிரிப்பும், அளவிறந்த அன்பும், அரவணைப்பும் ஒருசில வருடங்கள் தவிர ஏனைய காலங்கள் முழுவதும் மூழ்கித் திளைக்கும் பாக்கியத்தைப் பெற்றோம். எமது அம்மம்மா பற்றியவற்றை எழுதுவதானால் பெரிய புத்தகமாகவே எழுதலாம்.

அம்மம்மாவிடம் கற்றுக்கொண்ட நல்ல பல விடயங்கள் அதிகம். நல்வழி, நன்னெறி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், தேவார திருவாச கம் என்பவற்றை தானும் படித்து எமக்கும் சொல்லித்தருவார். அவரின் எதுகை மோனை அடுக்குமொழிகள், பொழிப்பான வார்த்தைகள் என்பன என்றும் நினைவு கூரத்தக்கவை.

இடையிடையே ஆங்கிலப் பதங்கள், சிறு வசனங்கள் என்பவற்றை யும் கூட அள்ளித் தெளிப்பார். இதற்காகவே நாம் இருவரும் எப்பொழுதும் கதை கொடுத்துக் கொண்டிருப்போம். அதுமட்டுமன்றி தமது பள்ளிப்பருவக் கதைகளைக்கூட மிக சுவாரிசியத்துடன் கூறி மகிழ்ந்து எம்மையும் மகிழ்விப்பார்.

நாமிருவரும் தறுகுறும்பு செய்து அப்பாவிடம் மாட்டிக் கொண் டால், மீட்டுவிடும் ஆபத்பாந்தவர் எங்கள் அம்மம்மா மட்டுமே. அப்பா விடமிருந்து அடிவாங்காது தப்பவைப்பது மட்டுமன்றி அம்மாவிற்கும் நல்ல மங்களம் கொடுப்பா. அம்மா எமக்கு ஏசினால் கூட அம்மா மேலுள்ள கோபத்தில் அம்மம்மாவிடம் வத்தி வைத்துவிடுவோம். அதற்கும் அம்மா செமடோஸ் வாங்குவா.

எங்களுக்கு பிரியமான உணவுவகைகள், சிற்றுண்டிகள் செய்து தருவார். எமக்கு பிரியமில்லாத உணவாக இருப்பின் "அச்சாப் பிள்ளையல்லே நீ இதைச்சாப்பிட்டால் கற்கண்டு தருவேன், இனிப்பு தருவேன் அல்லது எமக்குப் பிடித்த பலகாரம் ஏதாவது செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவேன் என கூறி ஊட்டி விடுவா. நாம் சாப்பிட்டதும் இவற்றில் எதாவது தர மறப்பதோ மறுப்பதோ இல்லை.

யாமாவிலிருந்து இடம்பெயர்ந்து உரும்பிராயில் எம்முடன் இருந்தபோது பின்னடியில் தெல்லிப்பளைக்குப் போவோம். என்னைக் கொண்டுபோய் யாமாவில் விடு எனக்கேட்டு அது நிறைவேறாதது கண்டு ஐயா, அம்மாவுடன் தர்க்கம் செய்வார். அதன்போது அம்மம்மாவிடம் இருந்த கோபம், பிடிவாதம் என்பவற்றைக் கண்டு வியந்தோம்.

ஆயினும் அம்மம்மாவின் பிரார்த்தனை, விருப்பம் என்பன வென்றது. அம்மம்மா யாமாவில் தன்னுடைய வீட்டில் வசிக்க மீள வந்ததும் அன்பும், சாந்தமும், அமைதியுமாக நிறைவாகவே தனது இறுதிக்காலம்வரை வாழ்ந்து வந்தார்.

அம்மம்மா காலை எழுந்தவுடன் ஐயாவின் பாதங்களைத் தொட்டு வணங்கி, சூரியவணக்கம் செய்து பின் ஒரு தூணை (உரும்பிராய் வீட்டில் முன்புறம் உள்ளது) கோவிலாக பாவனை செய்து மும்முறை வலம்வந்து வணங்கிய பின்னே தேனீர் அருந்துவார். இதனை தினசரி செய்யும் போது நாம் ஒருவித அதிசயத்துடனும், பயபக்தியுடனும் கண்டு கொண்டோம்.

இதனை எல்லாம் எமது சிறு வயதிலேயே அநுபவத்தில் கண்டமையால் நல்ல விடயங்களை கொள்ள அம்மம்மா உதவினார். அடக்கம், அதீத ஆசையின்மை, ஆடம்பரம் இன்றி வாழ்தல், கொள்கையில் பற்றுறுதியுடைய தன்மை என்பன மட்டுமன்றி, இப்படித்தான் வாழவேண்டும் என்பதைக் கூட எமக்கு வழிகாட்டியாக வாழ்ந்து காட்டிய பெருமை கூட எமது அம்மம்மாவையே சாரும்.

அம்மம்மா படுக்கையில் இருந்த காலத்தில் அவரை அம்மா கதிரையில் உட்காரவைத்து திருநீறுபூசி, பொட்டுவைத்து, தேவாரம் படித்தால் தானும் சேர்ந்து தேவாரம் படிப்பார் அத்துடன் நீங்கள் அம்மன் தானே எமது வீட்டம்மன் தானே என அம்மா கேட்டால் உடனே கண்சிமிட்டி ஆம் என கூறுவார். இவ்வாறு அம்மன் எனக் கூறினால் அவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அப்பா கூட அம்மம்மாவை தனது தாயாகவே போற்றி வந்தார். அம்மம்மாவிற்கு அப்பாமீது மிகுந்த அன்பு இருந்து வந்தது. எனவே எமது குடும்பம் அம்மம்மாவின் கடைசிக் காலங்களில் அவரை தெய்வமாகவே மதித்து போற்றி வந்தது என கூறின் உண்மையே.

அம்மம்மா கடைசி ஆறுமாத காலத்திற்கு மேலாக அம்மம்மா என அழைத்தால் மட்டுமே முகம்மலர்ந்து கதைப்பார். அம்மா என அழைத்தால் செவிசாய்க்கமாட்டா அம்மம்மா என்ற பதம் மந்திர மானது. எமது அம்மா, அப்பா கூட பின்னர் அம்மம்மா என்றே அழைத்து மகிழ்ந்தனர்.

எமது சிறுபராயத்தில் இருந்து அம்மம்மாவின் இறுதி மூச்சு வரை அவரின் நிழலில் வாழக்கிடைத்தமை தெய்வீக அருளேயன்றி வேறில்லை. எமது தெய்வம் தெய்வமாகிவிட்டார். அவரின் ஆத்மா சாந்தியடைய எமது குலதெய்வங்களை இறைஞ்சுகின்றோம்.

பேரர்
அரசி, ரூபன்

* உங்களை நீங்களே மதிப்பது ஆணவம். பிறர் உங்களை மதிப்பதே பெருமை.
* உண்மைக்குப் பயப்படுகிறவன் ஒருவருக்கும் பயப்பட மாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My homage to grandma

I was filled with deep sadness, when I found out that my grandmother has passed away.

I respected her very much. She was a divine when it came to her speech.

She would often use elaborate forms of speech when she communicated.

She had a soft sweet voice which always echoed in my mind.

I will never forget what she said to me it will always echo in my soul.

I don't think I will ever forget the bright smile on her face, which keeps me enlightened.

My grandmother wasn't just a grandmother; she was a spiritual divine to me.

She was like a role model to others.

I will miss her very much. may she attain moksha.

***with love and affection***
**Prana**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிப் பேர்த்தியின் இரங்கல்மொழி

**'குஞ்சுவின் குஞ்சு'** என்று அழைத்து, கட்டித் தழவி, முத்தம் கொடுத்து,

**'கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்க்குத் தக'**

என்று திருவள்ளுவரின் திருக்குறளைக் கூறுவீர்களே' அது இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இக்குறளின் மூலம் நல்லவளாக, நீதிநூல்கள் கூறுவதின்படி வாழ்க்கையை வாழ வேண்டும் என்று உணர்த்தியிருக்கிறீர்கள்.

அடுக்குமொழி தமிழிலும், ஆங்கிலத்திலும் என்னுடன் கதைத்ததும், பல கதைகள் சொன்னதையும் நான் எப்படி மறப்பேன்? பஞ்சபுராணம் அம்பாளுக்குரிய பாடல்கள் என்று எப்போதும் பாடிக் கொண்டு இருப்பீர்களே.

எனது அண்ணாவின் பெயர் பிரணவன். பிரணவனைக் கண்டதும் **'பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்..'** என்று கூறி மகிழ் வீர்களே' இப்படி எத்தனை எத்தனை காட்சிகள் அம்மம்மா என்று நினைக்கும் போது மனக் கண் முன் வருகின்றன. மும்முறை உங்களைக் பார்ப்பதற்கு ஓடி வந்தேன். அடுத்தமுறை வருவதற்கு ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும்போது இடிவிழுந்த செய்தியாக உங்கள் மரணச்செய்தி வந்தது.

உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு
உங்கள் கடைசி பேர்த்தி
தீபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Loving Great Grandmother.

My great grandmother Is fortunate. To have seen many great grand children in her life.

She was 95 years at the time of departing this world. she was a big part of our family.

I am told that she was a strict discipilinarian yet a kind and gentle soul.

She brought up her children and grand children that way. She even had a part In caring and guiding my mother In her formative years.

I can see how much my mother loved her and she naradtes interesting stories of her during her young days.

Due to the vast age gap I was not very close to her as my mother and grand mother were. yet I love heras much as my mother loves her.

She has lived a full life in this world and has gone to the unknown world. I pray for her peace and happiness over there.


***Great grand child***

**Mathumai. K.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எங்கள் மனைவிளக்காம் திருவாட்டி தையல்நாயகி
அம்மையார் சிவபதம் எய்திய செய்தியறிந்து
ஆறுதல் தெரிவித்தோர்க்கும், இறுதிக் கிரியையிலும்,
ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்ட உற்றார்,
உறவினர், நண்பர்களுக்கும் அஞ்சலி உரைகள் தந்துதவிய
பெருமக்களுக்கும், மேலும் பல்வேறு வகையில்
உதவியோர்க்கும், இம்மலரைச் சிறப்புற அச்சிட்டுதவிய
பாரதி பதிப்பகத்தினருக்கும் எமது மனப்பூர்வமான
நன்றியைத் தெரிவிக்கின்றோம்.


கணவன்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப் பிள்ளைகள்.

இயாமாவளவு,
தெல்லிப்பழை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்வழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வம்ச விருட்

## தந்தைவழி

- இருபாலை மண்ணாடு கொண்ட முதலி
  - ↓ தாமு உடையார்
    - ↓ வன்னித்தம்பி
      - ↓ ஆறுமுகம் (வள்ளிப்பிள்ளை)
        - நல்லாசிப்பிள்ளை + சின்னப்பா
        - விசாலட்சிப்பிள்ளை + கந்தவனம்
        - சுந்தரம்பிள்ளை + சுவாமிநாதர்
        - வேதநாயகி + வல்லிபுரம்
        - வன்னித்தம்பி + மங்கையற்கரசி
        - த... + கதி...
        - திருச்சிற்றம்பலம் + சிதம்பரவல்லி
          - ஆறுமுகசாமி + நீலாம்பிகை
            - சிவசக்திதேவி
            - சிவகெங்காதேவி + சிவயோகநாதன்
              - ↓ சிவபிருந்தாதேவி, சிவதர்ஷன்
          - கமலாம்பிகை + அய்யாத்துரை
            - பேரின்பநாயகம் + யோகேஸ்வரி
              - புனிதவதி + கணேஸ்வரன்
                - ↓ பத்மவாகினி, கிரிதரன்
              - நீலவேணி + சிவம்
                - ↓ நீரகா
              - கிருபாகரன் + பிரியரூபினி
                - ↓ அஜிதலக்ஷினி
              - சிவகெங்கா + கிருஷ்ணராஜா
              - தயாரூபி
            - பரமநாதன் + அம்பிகாதேவி
            - முத்துக்குமாரசாமி + யோகாம்பிகை
              - ↓ மாதங்கி, சோபனா
            - சண்முகநாதன் + செந்தில்செல்வி
              - ↓ மருதாசலன்
            - சோமசுந்தரம்
          - சுந்தரமூர்த்தி + தையல்நாயகி
            - வெற்றிவேலாயுதம் + செல்வமலர்
              - செல்வகௌரி + விஜயகுமாரன்
                - ↓ வீணா, விதுலா
              - செல்வபவன்
                - கேசி... + கோணே...
                  - ↓ மாதுன...
            - சுநி... + சிவா...
              - ↓ கோகு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



90 ஆவது வயது பூர்த்தியில்....



90 ஆவது வயது பூர்த்தியில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்."

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

Sivaranjanam

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org